

சிலம்பு	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௬, வைகாசி	பரல்
௨௯	ஜூன், 1955.	௧௦

தமிழில் வழிபாடு

“தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.”

வழிபாடு

வழிபாடு என்பது ஆன்றோர் வழியில் ஆண்டவன் வழியில் படுதல் என்பதாகும். படுதல் - சார்தல். ஆன்றோரைச் சார்ந்து அவர் ஆணைவழி ஒழுகுதல் வழிபாடாகும். அதுபோல் ஆண்டவனைச் சார்ந்து அவன் ஆணைவழி ஒழுகுதல் வழிபாடென்பது தானே பெறப்படும். வழிபாடு என்றாலும் பூசை என்றாலும் ஒன்றே. பூசையை அருச்சனை எனவும் கூறுவர். வழிபாடு, வழிபடுவோர்க்கும் வழிபடப்படுவோர்க்கும் புரியும் மொழியில் நடப்பதுதான் பயன் தருவதாகும். புரியாத மொழியில் நடந்தால் எப்படிப் பயனுண்டாகும்? உண்மையாக நிகழ்ந்த நிகழ்ச்சியொன்று: மதி என்னும் சொல் மலையாள மொழியில் போதும் என்னும் பொருளைக் குறிப்பதாகும். அச் சொல் சிங்கள மொழியில் போதாது என்னும் பொருளைக் குறிப்பதாகும். இருவரும் ஒருவரோடொருவர் அச் சொல்லைச் சொன்னால் என்னவாகும்? கலகந்தான் ஏற்படும். அப்படியே கலகமும் ஏற்பட்டது.

ஒழித்துக் கட்டுதல்

வழிபடுவோரின் தாய்மொழி வழிபடப்படுவோர்க்குப் புரியாவிட்டால் வழிபடுவோர் எங்ஙனம் நன்மை எய்துவர். அதற்காக அவ் வழிபடப்படுவோர் மொழிபெயர்ப்பாளர்களை உடன்வைத்துக் கொள்கின்றனர். அவர்களுக்குள்ள அருளிரக்கங்கூட நம் கடவுளுக்கு இல்லை என்றால், அஃது எவ்வளவு

கொடுமையாகும். கடவுளுக்குச் செய்யும் அருச்சனை வட மொழியி லிருக்கிறது. அது தமிழராகிய நம்மவர்களுக்குப் புரியாது. ஆண்டவனுக்குப் புரியும், அந்த ஆண்டவன் நமக்குப் புரியவைக்க ஒரு மொழிபெயர்ப்பாளனை வைத்துக்கொள்ள வேண்டாமா? இல்லையே! ஏன்? நாம் நம்முடைய தாய்மொழியாகிய தமிழ் மொழியில் அருச்சனை செய்தால் அஃது அவ் ஆண்டவனுக்கும் புரியும் என்னும் காரணத்தால் என்க. பின்னை ஏன்? தமிழருச்சனை நடக்கவில்லை? தமிழ்மொழிப் பற்றில்லாத, ஏன்? பகைக்கும் தன்மையும் வாய்ந்த பேர்கொண்ட பார்ப்பனச் சூழ்ச்சியால் குருக்கள்மார் சிலரும் சேர்ந்து முன் நடந்து வந்த தமிழருச்சனையை ஒழித்துக் கட்டினர். அது முடியுமா என்று சிலர் நினைக்கலாம். மூவர் பாடலிலும் பின்னும் முன்னும் வழங்கி வந்த திருமறைக்காடு என்னும் திருப்பெயரை இப்பொழுது நாம் கேட்கமுடிகின்றதா? அப் பெயரை என்ன செய்தார்கள்? ஒழித்துக்கட்டி அதன் மொழிபெயர்ப்பாகிய வேதாரணியம் என்னும் வட சொல்லை வழங்க வைத்துவிட்டார்கள். இஃது ஒன்று மட்டுமா? இன்னும் எத்தனையோ பல. ஆண்டவனுக்கு 'மொழிக்கு மொழி தித்திக்கும் மூவர் பாடல்.' எனச் சிறப்பெய்திய மூவர்க்கும் தித்தித்தது—இனித்தது திருமறைக்காடு என்னும் செந்தமிழ் மொழி. அம் மொழி பார்ப்பனர்க்கும், பார்ப்பனச் சார்பாம் சில குருக்கண்மார்க்கும் கசந்தது வியப்பல்லவா?

தமிழ் மந்திரம்

மேலும் அச்சிலர் உண்மையை மறைத்து உலகை ஏமாற்றி வருகின்றனர். மந்திரம் தமிழில் இல்லை; வட மொழியில்தான் இருக்கின்றது. மறை தமிழில் இல்லை; வட மொழியில்தான் இருக்கின்றது. சிவாகமம் தமிழில் இல்லை; வடமொழியில்தான் இருக்கின்றது. இம்மொழிகள் பெருங் கொடுமையையும், பத்தியையும் முன்னேற்றத்தையும் தடுப்பதும் ஆகிய மாறுபாட்டையும் தருகின்றன. சைவ சித்தாந்த முதல்வராகிய திருமுறை முதல்வர்களையும், மெய்கண்ட முதல்வர்களையும், அவர்கள் அருளாணைத் தமிழ் மந்திரங்களையும் இம் மொழிகள் புறக்கணிக்கின்றன. நால்வர் முதலிகள் தோன்றியிராவிட்டால் நம் சைவ சமயம் போன இடம் புல் முளைத்துப் போயிருக்கும். எங்கும் புத்த சமண அறியாமை இருளே செறிந்திருக்கும். அப் புத்த சமண இருளைப் போக்கியது திருமுறைச் செந்தமிழ் மந்திரங்களே யல்லாமல், வட மொழி மந்திரங்கள் அன்று. அத்துணை ஆற்றல் வாய்ந்த தமிழ்மந்திரங்கள் திருக்கோயில் அருச்சனைக்கும் பூசைக்கும் ஆற்றல் வாய்ந்தன அல்ல என்பது எவ்வளவு

அறியாமையும் பொருந்தாமையும் ஆகும். அதனைப் பகுத்தறிவுக்கண்கொண்டு ஆராயாமல் அப்படியே ஏற்றுக்கொள்ளும் நம்மவர் அறியாமை அதைவிடக் கொடுமை வாய்ந்ததாகும்.

திருமுறைத் தீந்தமிழ் மந்திரங்கள் செய்த அருட் பெருஞ் செயல்கள் அளப்பில. அவற்றுள் ஒரு சில ஈண்டுக் கூறுதும். பாண்டியன் சுரநோயை நீக்கிற்று, ஏடு எரியிலிட வேவாது பச்சையாய் விளங்கிற்று. ஏடு வையை யாற்றுக்கு எதிரே ஓடிற்று. திருமருகலில் பாம்பு கடித்து இறந்த வணிகனை எழுப்பிற்று. திருக்கொடிமாடச் செங்குன்றூரில் நீங்காக் குளிர் சுரத்தை நீக்கிற்று. திருப்பாச்சிலாச்சிராமத்தில் கொல்லி மழவன் மகளின் வலிநோயை நீக்கிற்று. திருமறைக் காட்டில் திருக்கதவினை அடைப்பித்தது. திருக்கொள்ளம் பூதூரில் ஓடத்தைச் செலுத்திற்று. புத்தன் தலையில் இடியை வீழ்த்திற்று.

சுண்ணாம்புக்காளவாயில் ஏழுநாள் வரை யிருந்தும் தீங்கொன்றும் இல்லாமல் இருக்கச் செய்தது. நஞ்சுண்டும் மாளாமல் இருக்கச் செய்தது. யானையை வணங்கச் செய்தது. கடலில் கல்லை மிதக்கச் செய்தது. பாம்புகடித்த பிள்ளையை எழுப்பியது. மறைக்கதவினைத் திறப்பித்தது. முதலையுண்ட பிள்ளையை அழைத்தது. தகாதது பேசிய புத்தரை ஊமையாக்கிற்று. பிறவி ஊமையாக இருந்த ஈழநாட்டு மன்னன் மகளைப் பேசச்செய்தது.

சேந்தனார் திருப்பல்லாண்டு தில்லைத் திருத்தேரைத் தானே ஓடி நிலைக்கு நிற்கச் செய்தது. உமாபதி சிவனார் கொடிக்கவி தில்லைத் திருக்கொடியைத் தானே ஏறச்செய்தது. சிவபெருமான் பாணபத்திரர்க்குச் சேரமான்பால் சேர்க்கத் திருமுகம் கொடுத்தது தமிழிலேயே. பெத்தான் சாம்பானுக்கு உமாபதி சிவனார்பால் சேர்க்கக் கொடுத்த சீட்டுப்பாட்டும் செந்தமிழே. இத்தனை எல்லாமிருந்தும் தமிழில் மந்திரமில்லையென்று கரைவது எத்தனை ஏழைமை. அதனை ஏற்றுக்கொள்வது எத்தனை கோழைமை. இனிமேலாவது தமிழ்மந்திரத்தின் ஆற்றலுணர்ந்து நாட்டிலும் வீட்டிலும் திருக்கோவில்களிலும் அதனையே கைக்கொண்டு ஒழுகி விழுப்பயனும் முழுப்பயனும் எய்துவார்களாக.

தமிழ் மறை

சிவபெருமான் திருவுள்ளம் செந்தமிழ் அன்பர்களுக்கு வடமொழி மறைதான் வேண்டுமென்றிருந்தால் அதனையே பயில அருளியிருப்பன். நால்வர் வாயிலாகத் தொன்மைத் தமிழ் மறையினை அருளியிரான். ஆண்டவன் ஆணையையும் கடந்து தமிழர் தலையில் வடமொழி மறையினைச் சுமத்துவது கொடுமை!

கொடுமையை மேலும் திருமுறைகண்ட புராணத்து வடமொழி மறை, பல கடவுளரைக் குறிப்பது என்றும் திருமுறை ஒரே கடவுளைக் குறிப்பது என்றும் கூறுகின்றது. திருமுறையைத் தமிழ்மறையென்றே கூறுகின்றது. அத்திருமுறையே ஆண்டவனுக்கு அளவிலா உவப்பைத் தருகின்றது என்றும் கூறுகின்கின்றது. அதுவே வழிபாட்டுக்கும் அருச்சனைக்கும் அமையும் என்று அழுத்தமாகவும் கூறுகின்றது. "அருச்சனை பாட்டேயாகும்" என்பதும் திருமுறையே.

மணிவாசகப் பெருமான் "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்வார்" என்றருளுகின்றனர். திருநாவுக்கரசர் "சொற்பாவும் பொருள் தெரிந்து" என்றருளுகின்றனர் சம்பந்தப் பெருமான் "ஞான சம்பந்தன செந்தமிழ் கொண்டிசை, பாடு ஞானம்" என்றருளுகின்றனர். இவற்றால் கடவுளை வழிபடுவோர் தங்களுக்கும் பிறர்க்கும் புரியும் தாய் மொழியினால் தான் வழிபட வேண்டும் என்னும் மெய்ம்மை வலியுறுத்தப்படுகின்றமை யாவரும் எளிதின் உணரலாம். வடமொழியில்தானே வழிபாடு; தமிழில் ஏது என்கின்றனர்! "ஞான சம்பந்தன், வந்த வாறே புனைதல் வழிபாடே" எனச் சம்பந்தர் அருளுகின்றனர். இங்கே 'சம்பந்தன்' என்பது ஆகுபெயராய் அப்பெருமான் அருளிய தமிழ்மாலையாகிய தேவாரத்தைக் குறிக்கும். இப்பொழுது திருக்கோவில்களில் என்னென்ன வழிபாடுகள் நடக்கின்றனவோ அத்தனையும் திருமுறைத் தெய்வத் தமிழால் நடத்துதற்கு திருப்பதிகங்கள் அருளியிருக்கின்றனர். அதனை நாம் மேற்கொள்ளாமல் இருப்பது பழிபாடேயாகும். பெற்றோர்களையும், பிள்ளைகளையும் மகிழ்விக்கும் தமிழ்மொழி சிவபெருமானை மகிழ்விக்காது என்று பிறர் சொன்னால் நாம் கேட்பதா? அச் சிவபெருமான் இவர்களிடமாக விளங்க வில்லையா? விளங்கித் தமிழ்மொழியைக் கேட்கவில்லையா? குடும்பம் கடவுள் உறையும் சிறிய இல். கோயில் அக் கடவுள் உறையும் பெரிய இல். கோயில் - பெரிய வீடு. கோ - பெரிய, இல் - வீடு. தமிழ் நாட்டில் வாழும் பிறமொழியாளர்கட்கும் தமிழ் தெரியும். அவர்களுக்கும் நம்மைப்போல் வடமொழி தெரியாது. இப்பொழுது கோவிலில் நடக்கும் வேதமந்திர வழிபாட்டைப் புரிந்துகொள்வார் ஒருவரும் இலர். அவ்வழிபாடு தமிழில் நடந்தால் எல்லாரும் புரிந்துகொள்ளுவர். பொருள்தெரிந்து பொருவிலா மகிழ்வு எய்துவர். அந்த நாள் எந்த நாளோ என்று எண்ணுதல் வேண்டா. இந்த நாளே வந்தது அருளால் என்று எண்ணுங்கள். பாடுஞ்சொல் புரியாவிட்டால் அச்சொற்பொருள் உணர்ச்சியை எப்படித் தட்டி எழுப்பும்? கோவில் வழிபாடு கூடியுள்ள

பெருமக்களுக்கே. பூசை செய்யும் அருச்சகருக்கன்று. அருச்சகர் தாங்கள் அருச்சனை செய்யும் கூலியாள் என்பதனை மறந்து விடுகின்றனர். ஆனால் கூலிபெற மறப்பதில்லை. அருச்சனை செய்விப்பாரிடம் அக்கூலியை வடமொழியில் கேட்பதில்லை. நம்மிடம் தேங்காய் பழம் வெற்றிலைபாக்கு வில்வம் பூ என்று தமிழில் கேட்கின்றார்கள். ஆண்டவனிடம் சொல்லும்போது நாளிகேரம் முதலிய வடமொழிச் சொற்களால் சொல்கின்றனர். தமிழ் ஆண்டவனுக்குத் தெரியாதா? அல்லது தமிழுக்கு அத்துணை ஏற்றந்தருவதா என்னும் புறக்கணிப்பா? அறிகின்றிலம். என்னவானாலும் இத்தகாத செயல் இனி நிலைக்காது. நாளும் மிகாது.

ஆண்டவன் தன் அருமைத் திருவாய்மொழியால் 'தில்லை வாழந்தணர்' எனவும், 'உலகெலாம்' எனவும் அடி எடுத்துக் கொடுத்தருளியது தெய்வத் தமிழல்லவா? முன்பு சிவபெருமான் பாட்டும் சீட்டும் கொடுத்தருளியது பழம்பெருந் தமிழில் என்று கண்டோம். இப்பொழுது தமக்காகக் குருக்கண்மார் தமிழில் சொன்னால் ஆண்டவன் வேண்டாமென்று சொல்லுவானோ? படிக்கத் தெரியாதவரும் தமிழில் பாடினால் விளங்கிக் கொள்வர். படித்துக் கரைகண்ட புலவர்க்கும் வடமொழியிற் சொல்லுவது புரியவில்லை. நாம் கோவிலிற் சென்றால் அங்கும் புரியாதமொழி வழங்குவதால் செவிடராகிவிடுகிறோம். அதனைப் பிறர்க்குக் கூறமுடியாமையால் ஊமராகிவிடுகின்றோம். கடவுளுக்கு வைக்கும் படைப்பைக் காணமுடியாமையால் குருடராகி விடுகின்றோம். திருக்கோவில் கட்டுகளில் சில இடம் செல்ல முடியாமையால் முடவராகிவிடுகின்றோம். இம்மையில் இறைவனைத் தீண்டமுடியாமையால் அம்மையிலும் தீண்டமுடியாதவராகின்றனம். இந்த முறையால் பார்த்தால் திருக்கோவில் செல்லும் தமிழன்பர்கள் செவிடராய், ஊமராய், குருடராய், முடவராய், தீண்டத்தகாதவராய் ஆகின்றனர். இதுதான் கோவில்களில் நாம் பெறும் பயன் என்று ஒருவர் சொன்னால் மறுப்பவர் யார்? "பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் பிறவா நாள்" அல்லவா? நாமும் திருக்கோவில்களில் சென்று தெய்வத் தமிழால் வழிபாடு செய்யாமையால் சிறந்த வுறுப்பைச் சிறவா உறுப்பாக ஆக்கிக்கொள்ளுகின்றோம்.

தமிழ் வழங்காத இடத்துக்கு நம் சமய முதற்குரவர்கள் சென்றருளவில்லை. அந்நாடுகள் பிறமொழி வழங்கும் நாடுகளாயுள்ளன. அந்நாடுகளிலுள்ள சிவபெருமானைத் திருக்காளத்தியிலிருந்தே பாடியருளினர். இந்த வுண்மை அவர்கள் சென்றருளிய இடமெல்லாம் செந்தமிழ் வழிபாடே நடந்ததென்பதனை

ஐயமறக் காட்டும். ஆனால் இப்பொழுது அவர்கள் சென்றருளிய இடங்களில் எல்லாம் தமிழ்மொழிக்கு இடமில்லை. வட மொழிக்கு இடமாக இருக்கின்றது. ஒருவன் உண்மைக் கருத்தைத் தாய்மொழியில்தான் உணர முடியும். இப்பொழுது நால்வர் பெருமக்கள் போன்றார் தோன்றுவரேல் நம் திருக்கோயில்களுக்குப் புறம்பாக நின்றுதான் பாட நேரிடும். ஏன், நால்வர் பாடியருளிய திருமுறைகள் இப்பொழுது நம் கோவில்களில் என்ன நிலையில் இருக்கின்றன? வடமொழி வேதம் கட்டாயம் படிக்கவேவேண்டும். அது படிப்பார்க்கு முதலிடம். தமிழ் வேதமாகிய திருமுறை ஓதுதல் கட்டாயமில்லை. எப்படியோ ஓத நேர்ந்தால் அதற்கு முதலிடமும் இல்லை. இதைப்பார்க்கும் போது 'ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர்' என்னும் செந்தமிழ்ப் பொதுமறை நமக்கே முற்றும் பொருந்துவதாகும். இக் குறையைப் போக்கவேண்டுவது நம் பெருங்கடமையல்லவா? தாய் மொழியில் அல்லாமல் சமயத்தையும் பத்தியையும் சாத்திரத்தையும் பரப்ப முடியுமா? இவ்வுண்மையறிந்த கிறித்தவர்கள் அவர்கள் மதத்தைத் தமிழ்மொழியில் பரப்புகின்றார்கள். நாம் என்ன செய்கின்றோம்: நம் தாய்மொழியாம் தமிழ் மொழியில் என்ன இருக்கின்றது? எல்லாம் வடமொழியிலிருக்கின்றது என்று கூறி நம்மவர்களைக் கிறித்துவ சமயத்தில் நிரப்புகின்றோம். இனிமேலாவது இக்கொடுமை அகலவேண்டும். பத்தி வளரவேண்டும். அதற்குரிய வழியில் ஆண்டவன் அருள்துணை கொண்டு செல்லுவோமாக.

தமிழாகமம்

ஆகமம் தமிழில் இல்லையே? என்ன செய்வது என்று உண்மை உணராது உரைக்கின்றனர். சிவபெருமான் அருள் ஆணைவழித் திருமூல நாயனாரருளியது செந்தமிழாகமம் அன்றோ? அவ்வாகமம் தமிழர்களாகிய நமக்கன்றோ சிவபெருமான் தந்தருளினன். அதை நாம் வழிபாட்டில் மேற்கொள்ளாவிட்டால் என்ன பயன்? அத் தமிழாகமத்தைத் தெலுங்கரா? அல்லது வடவரா? பிறரா மேற்கொள்வர். தமிழில்செய்யவேண்டுமென்றுதானே அத் தமிழாகமம் தோன்றப்பெற்றது. அப்படியிருக்கும்போது ஏன் இன்னும் வடமொழியை மேற்கொள்ளுதல் வேண்டும் இப்பொழுது கோவில்களில் நடக்கும் பூசை முதலிய பத்ததிகளை ஏன் தமிழில் மொழிபெயர்த்தல் கூடாது? தமிழில் செய்தல் கூடாது? எண்ணிப்பார்மின் சிவபெருமானே நமக்கு வழிகாட்டியாயிருக்க நாம் ஏன் பின்னடைதல் வேண்டும்? வடமொழியைவிடத் தமிழ் மொழிக்கே ஆற்றல் மிக்கதென்பது திருமூலர் திருவுள்ளம். அதுவரும் திருமந்திரத்தால் உணரலாம்.

ஐம்ப தெழுத்தே அனைத்துவே தங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத்தாக மங்களும்
ஐம்ப தெழுத்தின் அடைவை அறிந்தபின்
ஐம்ப தெழுத்தே அஞ்செழுத் தாமே. —௧0, ௨௬ - ௯௮

ஐந்தெழுத்து - சிவயநம

இவ்வைந்தெழுத்தின் பெருமையினை, வடமொழியினும் மேம்பட்ட சிறப்பாம் மாண்பினைத் திருமுறையில் பரக்கக் காணலாம். அஞ்செழுத்துண்மை காட்டும் திருப்பதிகங்கள் நான் குள்ளன. அவற்றுள் ஒன்று அந்தணர்க்கு அந்தியுள் மந்திரம் ஐந்தெழுத்தே என்பது. வரும் திருமுறையான் உணர்க :

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுண் மந்திரம் அஞ்செ ழுத்துமே. —௩. ௩. ௨௨ - ௨௨.

திருவைந்தெழுத்தைக்கொண்டே எல்லா வழிபாடும் செய்து கொள்ளலாமென்பது சித்தாந்த சைவ உண்மை. இஃது சிவ ஞானபோதத்து " அஞ்செழுத்தாலுள்ளம் " எனவும், சிவஞான சித்தியாரின்கண் "அஞ்செழுத்தா லான்மாவை" எனவும் வரும் திருப்பாட்டுக்களான் நன்கு விளங்கும்.

தமிழருச்சனை

ஆட்சிமொழி தமிழா வேண்டுமென்று அரும்பாடுபடுவது போல் அருச்சனை தமிழாகவேண்டும் என்னும் முயற்சியும் இருக்கிறது. இது வெளியுலகோர்க்கு நகைப்புக்கிடமேயாம். விரும்புவார்க்கு வடமொழியிலும் செய்யலாம் எனக் கூறும்போது தாய் மொழியாம் தமிழுக்கேன் இத்தனை எதிர்ப்பு. திருவைந்தெழுத்துக்கு ஓங்காரம் வேண்டாமைபோன்று திருமுறை அருச்சனைக்கும் ஓங்காரம் வேண்டுவதின்று. 'ஓம் சதாசிவாய நம' என்னும் தொடரை நாம் நம் தாய் மொழியில் 'சதாசிவனே போற்றி' என்று மொழிந்தால் போதுமானது. இது போற்றித் திருத்தாண்டகத்துள் 'சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி, சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி' என்னும் மறைமொழித் தொடரினை மெய்யன்பர்கள் காதாரக் கேட்க, வாயார மொழிந்து, கையார மலர்தூவிப் போற்றி வழிபடுவாராக.

போற்றித் திருத்தாண்டகம் ஐந்து, போற்றித் திருவகவல் ஒன்று தமிழருச்சனைக்கென்றே அமைந்துள்ளன. திருமுறைகளில் இடையிடையே வரும் போற்றித தொடர்கள் எண்ணிறந்

றன. இவற்றால் வழிபடுவோமாக. அகத்தியரும் தாம் திரட்டியருளிய தேவாரத்திரட்டில் திருமுறைப் போற்றித் தொடர்களையே அருச்சனை என்று உறுதி செய்துள்ளார். அவை வருமாறு: "பந்து, வேற்று, கொன்றிவை மூன்றும் நந்தலில் அருச்சனை நாட்டியதாகும்" என்பன. தமிழருச்சனையின் பொருட்டு நம் கழகத்தில் 'மலர் வழிபாட்டு வரிசை' என ஆறு சுவடிகள் வெளிவந்துள்ளன.

தாவில்நன் பொன்னணியாம் சாற்று திருமுறைகள்
மேவுபொற் றாலிமெய் யைந்தெழுத்தாம்—கூவுமறை
ஐம்பொன் கலப்பணியாம் ஆண்டுக் குறித்தசில
இம்பர்நவில் மந்திரமாம் எண்.

எண்ணல்

அருச்சனை செய்வார் நாளும், பொழுதும், பொருளும் கருதிக்கொள்ளுதலை எண்ணல் என்ப. இதனையே சங்கற்பம் என்பர். அம்மூன்றற்கும் வரும் திருமுறைத் திருமாமறையினை ஓதிக்கொள்ளுவது போதும்:

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

காலையே போன்றிலங்கு மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு—மாலையின்
தாங்குருவே போலும் சடைக்கற்றை மற்றவர்க்கு
வீங்கிருளே போலும் மிடறு.

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கள் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே.

திருச்சிற்றம்பலம்

தமிழாட்சி

[திரு. மா. ரா. வஞ்சிக்கோவன்]

முன்னுரை

ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டின் மொழியாட்சி நடைபெறச் செய்வதே நாட்டு மக்களின் தலையாய கடமையாகும். நாட்டு மொழி, பிறமொழியாதிக்கத்தினின்று விடுபட்டு ஆட்சி பெறல் வேண்டும். தனது தனிச்சுவை குன்றாது வளம் பெறல் வேண்டும். இந்த நோக்கம் தமிழகத்தில் இன்று ஈடேறக் காண்கிறோம். இனியும் தமிழகம் உறக்கத்தில் கண்மூடியிருத்தல் அழகாகுமா ?

மொழி வளம்

தொல்காப்பியத்திலிருந்து பாஞ்சாலி சபதம் வரை—புறநானூற்றிலிருந்து பாண்டியன் பரிசுவரை—சிலப்பதிகாரத்திலிருந்து ஆசிய சோதிவரை—தமிழ் மொழியின்—தமிழ்க் கன்னியின் இளமை, பொலிவு, அழகு காட்டப்படுகிறது. தமிழ்க் கன்னியின் பொலிவைக் கண்டு பெருமிதம் அடைகிறோம். அவளின் இனிய ஓசையைக்கேட்டு இதயம் பூரிக்கிறோம். அவளின் அழகிய அணிகளைக் கண்டு ஆச்சரியப்படுகின்றோம். கன்னல் தமிழ், கற்கண்டுத் தமிழ், அமிதத் தமிழ், வற்றாத வளம்பெற்ற தமிழ் அருவி என்று வருணிக்கிறோம்.

மொழி நம்மை உணர்வுகொள்ளச் செய்யும்—பரவசமூட்டும்—துடிப்பு உண்டாக்கும் ஒரு பொருள்; தாய் மொழி நம்மைத் தலைநிமிர்ந்து நடக்கச் செய்யும் தனிப்பண்பு உடையது.

மொழியும் இனமும்

ஒரு நாட்டின் இயல் சீர்குலைந்தது என்றால் - ஒரு நாட்டின் இசை சீர்குலைந்தது என்றால்-ஒரு நாட்டின் நாடகம் சீர்குலைந்தது என்றால் - அதற்குக் காரணம் பிறமொழிக் கலப்புத்தான் என்று கிரேக்கநாட்டு அறிஞர் அரிஸ்டாட்டில் கூறியிருக்கிறார்.

எனவே, ஒரு நாட்டின் மொழி நல்ல வளர்ச்சி அடைய வேண்டுமாயின் அந்த மொழி பேசும் இனம், அந்த இனத்தின் கலை, அந்த இனத்தின் நாடு இவைகள் தனித்தியங்கவேண்டும். கொடுங் கயல்களுக்குத் தப்பி நெடுங்கடலில் கலம் செலுத்திய தமிழன் - ஒல்காப் புகழுடைய தொல்காப்பிய காலத் தமிழன்-

இன்றைய • மொழிக்கலப்புற்ற தமிழைக் கேட்க நேர்ந்தால் இதழ் கிழிய நகைப்பானன்றே?

நாற்பெருங் கவிஞர்

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவனைப்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணும் கண்டதில்லை" என்றார் பாரதியார். தமிழ் மொழிக்கு இலக்கியச் சுவையை ஊட்டினன் கம்பன். தமிழன் கொள்கைகளை வரையறுத்தான் வள்ளுவன். தமிழ்ப் பெண்மையை எடுத்துரைத்தான் இளங்கோ. இதைக்கொண்டுதான் பாரதி அப்படிப் பாடியிருக்கவேண்டும். "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்" என்ற புதுமைக் கவியின் கருத்துப்படி ஒவ்வொருவரும் செயலாற்ற முற்பட வேண்டும்.

தமிழரும் மேனாட்டுச் செலவும்

அயல்நாடு செல்லும் தமிழர்கள் நம் தாய்மொழியின் சிறப்புப்பற்றிச் சிறந்த சொற்பொழிவுகள் ஆற்றுதல் வேண்டும். இதனால் மேனாட்டார் தமிழின் சுவையை உணர்ந்து அதனைக் கற்க முற்படுவர். அவர்கள் வழியாகத் தமிழ் பரவத் தொடங்கும். ஒவ்வொரு தமிழனும் மேனாட்டுச் செலவுகளை மேற்கொள்ளும்போது இவ்வாறு செய்தால் விரைவில் தமிழ் உலகம் போற்றும் மொழியாகும் என்பதில் ஐயமில்லை. தானே தனித்து உண்பதைவிடப் பகுத்துண்பது எவ்வளவு நல்லதோ, அதுபோல் தானே தமிழின் சுவையை உணர்ந்து மகிழும் மகிழ்ச்சியில் மற்ற மொழியாளரையும் பங்குபெறச் செய்தல் நலம். அதனால் நம் மகிழ்வு குறையாது மிகுதிப்படும்.

புதுமை மலர்தல்

தமிழ்மொழியிலே புதிய இலக்கியங்கள், காவியங்கள் தோன்றவில்லை என்று சிலர் கூறுகின்றனர். மறுக்க முடியாத உண்மை. தற்போது இருக்கின்ற இலக்கியங்களையே சரியாகப் படித்துப் பொருள்கொள்ளத் தெரியவில்லை சிலருக்கு! இந்நிலையில் புதிய இலக்கியங்கள் எவ்வாறு தோன்றும்? இன்றைய நிலையில் இலக்கியங்கள் தோன்றா. தோன்றவும் முடியாது. பண்டைக்காலத்திலே மக்கள் துன்பமின்றி வாழ்ந்து வந்தனர். காவியங்கள் தோன்றின. துன்பம் மக்கள் மனதில் இருந்தால் காவியங்கள் தோன்றா. இன்று மக்கள் படுந்துயர் கொஞ்சமில்லை. உணவு கிடைக்கிறது; வாங்குவதற்குப் போதிய பணமில்லை. படிப்பு இருக்கிறது; ஆனால் வேலை இல்லை. ஒருவேளை தாம் படும் துன்பச் சுமையை அவர்கள் காவியமாக்கலாம்.

தமிழாட்சி

எண்ணங்களைக் கோடிக்கணக்கில் எண்ணுகிறோம்; பேச்சுக்களை இலட்சக் கணக்கில் பேசுகிறோம்; எழுத்துக்களை ஆயிரக்கணக்கில் எழுதுகிறோம்; குறிக்கோளை நூற்றுக்கணக்கில் குறிக்கிறோம்; துணிச்சலில் பத்துக்கணக்கில் துணிகிறோம்; ஆனால் செயலில் ஒன்றையாவது உருவாகச் செய்வதில்லையே! இனி இந்த நிலை கூடாது. தமிழை வளர்ப்போம் எனக் கங்கணங் கட்டிக்கொண்டு கிளம்புவோம். பாரதி கண்ட தமிழகத்தை உருவாக்குவோம். தமிழ்த் தெருக்கள் முழுதும் தமிழ் முழக்கம் செய்வோம். தமிழென்று சொல்லுவோம். தலை நிமிர்ந்து நிற்போம். நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை இவற்றோடு தமிழ் வாழ்க என எடுத்துரைப்போம். இமயத்திலே கொடி நாட்டினனே செங்குட்டுவன். அந்த இமயம் வரைக்கும் நம் குரல் கேட்கட்டும்! வரலாற்றில் காணும் வெற்றி முரசு ஒலித்த வண்ணம் இருக்கட்டும். தமிழ், தமிழகத்தின் அரசியல் மொழியாகும்வரை நாம் அயரமாட்டோம். தமிழ்நாடு தனித்திருந்து தமிழாட்சி நடத்தவேண்டும். அரசாங்க ஆலோசனைகள் அலுவலகங்கள் யாவும் தமிழிலேயே நடைபெறுதல் வேண்டும். நீதிமன்றங்களில் தமிழாட்சி நிலவவேண்டும். தெய்வ வழிபாடு தமிழிலேயே நடத்தல் வேண்டும்.

எண்ணம் ஒரு மலர். மொழி அதன் மொட்டு. செயல் அதன் பழுத்த கனி. கற்றோரும் மற்றோரும் தமிழைக் கொடுமைப் படுத்தாமல் இருப்பார்களேயானால் அதுவே அவர்கள் மொழி வளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் என்பதை எடுத்துக்காட்டும்.

பழங்கதைகள்

திரு. வி. க. சொன்னார்: "உலகம் என் உடல்; இந்தியா என் உள்ளம்; தமிழகம் என் உயிர்" என்று. ஆனால் தமிழ்த்தென்றல் திரு. வி. க. இன்று இல்லை. நம் கடமையை நமக்குக்கூற யாருமில்லை. நாமே நம் கடமையை உணர்வோம். அன்று மதுரையிலே சங்கம் வைத்து வளர்க்கப்பட்ட தமிழ்! சிவபெருமானே தமிழில் பாடினார் என்றெல்லாம் பேசுவதிலே பயனில்லை. "பண்டைப் பெருமை பேசிப்பேசி மண்டை உடைத்து மாள்வதேன்" பண்டைப் பெருமையைப் பேசாதே. அதனால் இன்றைய தமிழ் வளராது என்று இடித்துக் கூறுகின்றார் நாஞ்சில் நாட்டுக் கவி. இனி ஆகவேண்டியதைக் கவனி என்று கட்டளையிடுகிறார் கவிமணி!

தமிழர் கடமை

நமது தாய்மொழியாகிய தமிழ் பழைய நிலைக்குத் திரும்ப வேண்டுமானால்....? தமிழர்கள் ஓரளவு கல்வி அறிவு பெற்றுத்

தாய்மொழி என்றால் என்ன? என்பதை அறிந்துவிட்டார்களானால் மிக விரைவில் ஓரிரண்டு ஆண்டுகளில் செந்தமிழ் நலந்திகழ ஓங்கி வளரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இங்ஙனம் அழியாதுகிடைத்த அரும்பொருளைத் தெளிவும், இனிமையும், எளிமையும் உடைய செந்தமிழ் மொழியைச் சீரிய முறையில் பாதுகாப்பது தமிழ் மக்களின் கடமையன்றோ? உரிமையாக, அருமையாகக் கிடைத்தசெல்வத்தைப் போற்றாத ஒருவன் தூற்றப்படுவானல்லனோ?

“உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே” என்றார் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அது முற்றிலும் உண்மை. அமரகவி, “யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்” என்று கூறவும், பாரதிதாசன், “பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தோரைச் சங்காரம் செய் என்று சங்கே முழங்கு” என்று துணிந்து கூறவும் முடிந்தது. “தமிழ் நாட்டின் தமிழ்த் தெருவில் தமிழ்தான் இல்லை” என்ற ஒரு கவியின் உள்ளம் நைந்த சொற்கள் மாறி, “எங்கெங்குக் காணினும் சக்தியடா” என்றவாறு எங்கெங்கும் தமிழ் முழங்கவேண்டும். மொழி நாட்டின் விழி என்பது அறிஞர் கருத்து. பயிர்களுக்கு இடையே களைகள் இருப்பதுபோல் நம் தமிழ் மொழியிலும் தேவையற்ற பிறமொழிச் சொற்கள் பல இருக்கின்றன. களையைக் களைந்தால்தான் பயிர் செழிப்பாய் வளரும். அதுபோல் தமிழிலுள்ள களையைப் போக்கினால் தான் தமிழ் சிறப்பு நிலையை அடையும். இதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

அன்னையின் அறைகூவல்

தமிழ்த்தாய் ஓலமிடுகிறாள்! சிலம்புச் செல்வத்தை அளித்த தமிழ்த்தாய் - மேகலையைக் கொடுத்த தமிழ்த்தாய் - குறளை ஈந்த தமிழன்னை - உதவி வேண்டுகிறாள்! நாமெல்லோரும் அவளின் புதல்வர்கள்! வாருங்கள் செல்வோம் உதவிக்கு!

அண்டை நாடு ஆந்திரம். அதைக்கண்டாவது தமிழை ஆட்சிமொழியாக்குவோம். தமிழைத் துச்சமாகப் பேசிய கனக விசயர் தலைகளில் கல் சுமக்கச் செய்த செங்குட்டுவன் வழித் தோன்றல்கள் நாம்! பொறுத்தது போதும். எலியென நம்மை இகழ்ந்தவர் நடுங்கப் புலியெனச் செயல்செயப் புறப்படுவோம்!

கானல்வரி

[வித்துவான் ஆ. சிவலிங்கனுர், மயிலம்.]

(சிலம்பு: உக, பரல்: உ, அக-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோவலன் கடற்கரைப் பாடல் அவன் வேருெரு குறிப்புடையவன் போலத் தோன்றியதாதலின் மாதவியும், தானும் வேருெரு குறிப்புடையள்போலத் தோன்றும்படிப் பாடியது முறையாமா? அவள் பாடக் காரணம் யாதாகும்? இவையே நாம் காணவேண்டுவன.

உண்மையில் மாதவிக்குக் கோவலனையன்றிப் பிறன் ஒருவன்பால் மனம் நாடியதேயில்லை. அவள் எச்செயலையும் தன் கோவலன் பொருட்டே செய்துவந்தாள். அவனை மகிழ்விப்பதே அவள் உட்கோள்.

> "நிலவுப்பயன் கொள்ளும் நெடுநிலா முற்றத்துக்
> கலவியும் புலவியும் காதலற் களித்தாங்கு
> ஆர்வ நெஞ்சமொடு கோவலற் கெதிரிக்
> கோலங்கொண்ட மாதவி" (சிலப் ச-நஉ-ச)

எனக் கூறுகின்ருர் இளங்கோவடிகள். தான் நாடகக் கணிகையாதலின், ஆடலும் பாடலும்கொண்டு பிறரை மகிழ்விக்கும் செயலையும்விடாது போற்றிவந்தாள். அம்முறையினுலே இந்திர விழாவிலும் அரங்கேறிப் பதினெருவகைக் கூத்துக்களையும் ஆடிக் களிப்பித்தாள். இங்குக் கோவலன், மாதவியின் ஆடலும் பாடலும் பிறர்க்கும் இன்பம் செய்தலைக்கண்டு பொருதவனுனன். அதனுல் உள்ளத்து ஊடல் கொண்டான். அதனையுணர்ந்த மாதவி கூடற்குரிய ஊடல்என எண்ணி, அதனைப்போக்கத் தன்னை யழகுபடுத்திக் கூடல்உணர்வு தோன்றச் செய்தாள். இவ்விடத்தைத் தெளிவுபடுத்தவந்த உயர்திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் தமது சிலப்பதிகார ஆராய்ச்சியில் எழுதியனவற்றைக் காணலாம்.

> "அவளுடைய பாடலும் ஆடலும் அழகும் மக்கள் மனத்தை இன்புறுத்தக்கண்டு கோவலன் "ஊடற்கோலம்" உறுகின்ருன். இங்கேதான், அவன் மாதவியைப் பிரிதற்குத் தோற்றுவாயாகிய மனப்பிளவு தோன்றுகிறது. இதனை மாதவி தெளிய உணராது, வாளாது, கூடற்குரிய ஊடலென்றே கருதி யொழிகின்ருள். அவனுவக்குமாறு

> தனது கூந்தல் முதல் சீறடியீறாகப் பலவகையுறுப்பும் அழகு திகழப் புனைந்துகொள்ளுகிறாள். இக்கோலம் கொண்டது அவன் உவக்குமாறே யன்றித் தன்னைக் காண்பார் மகிழுமாறு அன்று என்பதை அடிகள், "ஊடற் கோலமொடு இருந்தோன் உவப்ப" (கடலாடு, ௭௫) என்றும், "கூடலும் ஊடலும் கோவலற் களித்துப், பாடமை சேக்கைப் பள்ளியுள் இருந்தோள்" (கடலாடு ௧0௭—௧0) என்றும் நன்கு வற்புறுத்துவதனால், இம்மாதவி, நாடக மகளாயினும் குலமகட்குரிய கற்பும் பொற்பும் உடையளாய் இருந்தமை தெளிய விளங்குகிறது. கடற்கானற்குச் செல்லும்போதும் இம் மாதவி, கோவலனுடன் ஒரே ஊர்தியிற் செல்லாது, அவன் ஒரு கோவேறு கழுதைமேல் இவர்ந்து வரத் தானோர் வையமேறிச் செல்லுகின்றாள்"
>
> (பக். ௬௬, ௬௭)

இவர்கள் தம் கூற்றில், மாதவி குலமகட்குரிய கற்பும் பொற்பும் உடையளாக இருந்தமை தெளிய விளங்குகின்றது. ஆயினும் கணிகைக்குரிய குணமும் தலைதூக்குகிறது என்றும் கூற விரும்புகின்றேம். கணவன் பரத்தமை கொண்டானாயின், அவனை மனைவி, புலந்துகொள்வதும் பரத்தையைப் பழிப்பதும் செய்வள். அவ்விரண்டும் செய்யாதவளே கற்புடை மனைவியருள்ளும் சிறந்தவளாகக் கருதப்படுவாள். கோவலன் பாடிய "திங்கள் மாலை வெண்குடையான்" என்று தொடங்கும் பாடலும் இக்கருத்தையே வலியுறுத்தும். கண்ணகி அத்தகையவளே. மாதவியையும் பழித்தாளல்லள்; கோவலனையும் வெறுத்தாளல்லள். தீதிலா வடமீனின் திறம் உடையவளாதலின் அப்பெருங்குணம் பெற்றிருந்தாள்.

> "எழுதுங்கால் கோல்கோணாக் கண்ணேபோல் கொண்கன்
> பழிகாணேன் கண்ட விடத்து."

என்று கூறினாள் ஒருத்தி. அவளையும் விஞ்சினாள் கண்ணகி. கணவன் போற்றா ஒழுக்கம் புரிந்தானாகக் கருதினாளேயன்றி அதுபற்றி அவனைப்பழிக்கும் எண்ணம் கொண்டிலள். அதனாலன்றோ குலமகளிருட் சிறந்தவளானாள்! இனி மாதவியும் குலமகட் கற்புடையவளென்றால் அது குறைபாடுடையதாகும் என்க. மாதவி கோவலனையன்றிப் பிறனை நினையாதவள்தான். கோவலன் கொலையுண்டதுகேட்டுத் தான் துறவறம் கொண்டதே அதனை வலியுறுத்தும். தன் மகள் மணிமேகலையையும், தன் தாய் சித்திராபதி வேண்டியும் கேளாது ஆடலரங்கில் நிறுத்தாது விட்டதுடன் அமையாது, துறவினை மேற்கொள்ளச் செய்ததும்

காண்க. கோவலனும் கண்ணகியைப் பிரிந்தவன் மாதவியிடத்திலேயே தங்கிவிட்டான். அதனால் கண்ணகியைப்பற்றிய நினைவையே யிழந்திருந்தான். இதனை,

"அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னைநும்
பெருமகள் தன்னொடும் பெரும்பெயர்த் தலைத்தாள்
மன்பெருஞ் சிறப்பின் மாநிதிக் கிழவன்
முந்தை நில்லா முனிவு இகந்தனை
அற்புளஞ் சிறந்தாங் கருள்மொழி யளைஇ
எற்பா ராட்ட யானகத் தொளித்த
வாயல் முறுவற்கவ ருள்ளகம் வருந்தப்
போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" (சிலப் கொலை. எக-அக)

என்று கண்ணகி கோவலனிடம் கூறியனவற்றால் நன்கு அறியலாம். அன்றியும் வேறு பரத்தையையும் கருதினானல்லன். எனவே, அவனும் மாதவியால் பழிக்கப்படற் குரியனல்லன். மாதவியும் தான் கணிகையாதலின், 'குலமகளைப் பழிப்பது பரத்தையர்க்குண்டு' என்ற நிலையினையும் அடைதற்கு வாய்ப்பில்லாதவளானாள். இந்நிலையில், இந்திரவிழா நாளில் கடற்கானப் பாடல்மூலம் கோவலன்பால் குற்றம்கண்ட மாதவி செயற்பாலது யாது? கோவலன் வேறு குறிப்பில்லாதவன் என்பதை நன்கு உணர்ந்தவள், அவன் பாடலால் அவ்வாறு வேறாக உணர்ந்தவுடன் ஊடல்கொள்வது முறையேயன்றித் தானும் அவ்வாறு வேறு குறிப்பின்றியிருந்தும் உடையவள்போலப் பாடுவது அழகோ? இவள் செய்கை, "நீ யென்னையன்றி வேறொருத்தியை விரும்பியதால் நானும் நின்னையன்றி வேறொருவனை விரும்பினேன்," என்று தன் கணவனிடம் ஒருத்தி கூறின் அக்கூற்றை ஒக்குமன்றோ? குலமகள் அவ்வாறு கூறுவாளோ? கூறின் உலகம் தூற்றாதோ? எனவே, மாதவி பிறவகையில் சிறந்தவளானாலும் இக் கானல்வரிப்பாட்டளவில் தவறுடையவளாவள் என்பதில் ஐயமில்லை. எனினும், அவ்வாறு பாடுவது தவறு என அவட்குப் புலப்படவில்லை அப்போது. ஏன்?

மாதவி குலம் கணிகையர் குலம். மாதவியின் தாய் சித்திராபதி என்பவள் பொருள் மிகுதியாகக் கொடுத்தார்க்கெல்லாம் உரியவளாக இருந்தவள். மாதவி தன் மகள் மணிமேகலையைத் துறவுக்கோலத்தினளாகச் செய்த காலத்தில் சித்திராபதி தடுத்து தீய தொழிலிலேயே ஈடுபடுத்தும்படி வற்புறுத்தினாள் என்று மணிமேகலையால் அறிகின்றோம். அத்தகையவள் மகள்

மாதவியாதலின், அவள் குணம் மாதவியிடம் எஞ்சியிருக்கும் அன்றோ? அதன்விளைவே கடற்கரைப்பாட்டில் மாறுபட்ட நிலையை மேற்கொள்ளச்செய்தது என்னலாம்.

> “ தக்கார் தகவிலர் என்பது அவரவர்
> எச்சத்தாற் காணப்படும் ”

என்பது வள்ளுவர் வாக்கு. தன் வினைப்பயத்தால்பெற்ற நற்குணங்களையும அறிவையும்கொண்டு கோவலனுடன் குலமகளைப் போல் ஒழுகி வந்திருந்தாலும், குலப் பிறப்புக்குணமும்-அதாவது தன் தாயின் குணமும் உடையவளாய் இருந்தவளாதலின் அவ்வாறு பாடினாள் என்க. தாயின் குணம் அடங்கிக் கிடந்து செயலறவுபட்டதாய் இருப்ப மற்றைக்குணங்கள் மேலோங்கி மாதவியை மாண்புறச் செய்தன. கானல்வரிப் பாட்டிடத்து மட்டும் ஊழ்வலியும் உடன் தூண்டக் குலப்பிறப்புக் குணம் தலைதூக்கிக் கோவலன் பிரியப் பின் அடங்கியது என்னலாம். எனவே, கோவலனுக்கு மாறுகப் பாடியது குலகமளின் மாண்புக்கு ஒவ்வாது என்னலாம்.

சிறந்தல் கடனே!

[நாஞ்சில், கா. கணபதி]

எழுதிடும் எழுத்தும் இயற்றும் செயலும்
முழுமுதற் றாய்மொழி வழியே செய்க!
அண்டை நாட்டில் சொந்த மொழிதனை
மண்டு காதலால் மயங்கா தழுந்திப்
பரப்புதல் பார்த்துப் பயில்வது கடனே!
அடிமை வாழ்வு அகன்ற பின்பும்
கொடிய பிறிது குதர்க்க மொழியை
வடிய நீக்கி வழங்குதல் கடனே.
செம்மை நல்கிச் சீரும் ஊட்டும்
வண்மைத் தமிழே வயங்கல் கடனே!
ஊரும் பேரும் உருவும் தெரியா
ஆரிய மொழிதனை அகற்றல் கடனே!
வழிவழி வழங்கும் தமிழ்மொழி வளரச்
செய்வன செய்து சிறத்தல் கடனே!

குமரிமுனை

[திரு. செ. முத்துவீராசாமி நாயுடு, B. A.]

குமரிமுனையை நினைக்கும்போது தென் தமிழ்நாடு, கடலால் கவரப்பட்ட நிகழ்ச்சியும் விளைந்த இழப்பும் நினைவுக்கு வருமாற்றான் உள்ளம் வருந்துகிறது. விளையாட்டாகத் தாம் மணலினால் அமைத்த இல்லங்களைப் பின் சிதைத்து மகிழ்தலும் பிள்ளைகளுக்கு விளையாட்டேயாவது போன்று, ஆக்கலையொத்து அழித்தலும் எல்லாம்வல்ல தெய்வத்தின் திருவிளையாட்டே போலும்! தென்னாட்டின் மறைவும் இவ்வாறே நிகழ்ந்ததெனை உணரினும் பல்லாயிர ஆண்டுகள் கழிந்தபின், இன்றுங்கூட, உள்ளம் ஆறுதல் கொள்வதில்லை.

கடந்த ஆடித்திங்களின் இறுதியில் பாண்டி நாட்டிலுள்ள சில ஊர்களுக்குச் சென்று, ஆங்குள்ள கலைத்திறம் திகழும் திருக்கோவில்களில் இறைவனை வணங்கியபின் ஒருநாள் பிற்பகலில் குமரிமுனைக்குப் புறப்பட்டேன். முனநாள் பெய்த மழையின் பயனாகக் குளிர்ந்த மென்காற்று வீசிக்கொண்டிருந்தமையால், வெப்பம் தோற்றவில்லை. தண்ணிழலளிக்கும் சாலை மரங்களிலிருந்து சில பறவைகள் பாடிக்கொண்டிருந்தன. யானிருந்த [1]பேருந்து, திருவாங்கூர் எல்லைச் சுங்க நிலையத்தைக் கடந்தபின், அவ் விராச்சியத்தின் தென்பகுதியிலுள்ள தமிழர் வாழும் நாஞ்சில் நாட்டின் இடையே சென்றது. செல்லும் வழியிலிருந்த ஊர்களினிடை அப்பேருந்து தங்கிய போதெல்லாம் அந்திலப் பகுதியில் ஏதோ பரபரப்பு ஏற்பட்டிருந்ததாகக் காணப்பட்டது. பேருந்திலிருந்தோர் உரையாடலிலிருந்து, தமிழர் வாழும் அப்பகுதியைச் சென்னை இராச்சியத்துடன் இணைத்திட வேண்டி மக்கள் நடத்திக்கொண்டிருந்த போராட்டத்தைத் தொடர்ந்து, அந்நாடெங்கும், அடுத்த நாள் வேலை நிறுத்தமும், ஊர்வலங்களும் நிகழ்த்துவதெனக்கொண்ட திட்டத்தைப் பற்றியதே அப்பரபரப்பென்பது தெரியவந்தது.

மலையாளிகள் வாழும் அந்நாட்டின் எஞ்சிய பகுதி, முன்னாள் சேரநாட்டின் ஒரு பகுதியேயாகும். மலையாளிகளின் முன்னோரும் அன்னார் அரசர்களாகிய சேரரும் தமிழரேயாவர். தமிழ் இலக்கிய நூல்களின் முன்னணியில் நிற்பதும் ஒப்பற்ற

---

1. பேருந்து-Bus

நாடகக் காப்பியமெனப் போற்றப்படுவதுமான சிலப்பதிகாரத்தைத் தந்தருளியவர் அந்நாட்டின் இளங்கோ ஒருவரே யாவர் எனவும், மொழிமாற்றத்தினால், அதற்குக் காரணமாயிருந்த வேற்றுவகுப்பினர் நாகரிகத்தைப் படிப்படியாகத் தழுவியவர், நாட்கள் கழியக்கழிய அம்மாற்றத்தை ஏற்காத நாட்டின் பிற பகுதியினரைத் தம்மில் வேறுபட்டவரென்று கருதலாயினர். அவ் விருவகுப்பின் வழிவந்தோரிடையமைந்த வேற்றுமை இன்று முற்றிவிட்டமையால், தமிழர், அடுத்துள்ள தமிழ்நாட்டுடன் தாம் வாழும் நிலப்பகுதியை இணைத்துக்கொள்ள விரும்பிப் போராடுவதில் வியப்பொன்றுமில்லை.

எழுந்த இந் நினைவுகளைச் சிந்தைசெய்து கொண்டிருக்கும்போது, பேருந்து, குமரிமுனையின் தென் கிழக்கிலுள்ள அரசினர் சாவடியின் முன்னிலைக்கு வந்தது. இறங்கிச் சென்று அச் சாவடியின் கீழ்புறம், மதில்சுவரை யடுத்துள்ள ஒரு அறையில் தங்கினேன். அவ்வறையின் கீழ்புறமுள்ள பலகணியினூடு, வங்காள விரிகுடா காணப்பட்டது. அதன் அலைகள் அம்மதில் நிற்கும் பாறைகளின்மீது தாக்கும் ஓசை ஒலித்துக்கொண்டே இருந்தது. மாலைப்பொழுது அணுகியது. பகலவன் மறையும் கோலத்தைக் காணவிரும்பி, அறையைவிட்டு வெளிப் போந்தேன். வீசும் குளிர்ந்த காற்றினால் பகலவன் வெப்பம் தோற்றவில்லை. அவன் ஒளி நிலவொளியெனத் காணப்பட்டது. மதில் சுவரைக் கடந்து சிறிது கிழக்கே சென்றதும், நேரே தென்புற மமைந்த வீதியின் கோடியில் குமரித் தெய்வம் எழுந்தருளி யிருக்கும் திருக்கோயிலின் வடவாயிற் கோபுரம் தென்பட்டது. அவ்வீதியொழிய, இல்லங்கள் நிரல்பட அமைந்த தெரு அப் பாக்கத்திடை வேறொன்றுமில்லை. அத்திருக்கோயிலிலும், அரசினர் களரிகளிலும், சாவடிகளிலும் வினையாற்றும் அலுவலர்களும் ஆங்குள்ள சில உணவு விடுதிகளிலும், சில நாளங்காடிகளிலும் உள்ளவர்களுமே அச் சிற்றூரின் குடிகளாவர். உழவும் பிற தொழில்களும் நிகழாமையின் மக்கள் பலர் கூடி வாழ்வதற்கான வாய்ப்புகள் ஆங்கில்லை. எனவே, மக்கள் திரளாக வாழும் ஊர்களிடை மேவும் சந்தடியும் இரைச்சலும் ஆங்கில்லை; அமைதி மேவி நிற்கின்றது. திருக்கோயிலின் வலப்புறஞ் சென்று, அதனை யடுத்துத் தென்புறமுள்ள முனையை யடைந்தேன்.

இச்சிறு மணற்பரப்பின் நாற்புறமும் தாழ்ந்த மதில்சுவர் அமைக்கப்பட்டுள்ளது. நடுவில் ஒரு கல்மண்டபம் நிற்கின்றது. தென்மதிலிடையமைந்துள்ள படித்துறையின் கீழ், சிறு பாறைகளினிடை, தென்கடலும் வங்காள விரிகுடாவும் அராபிக் கடலும் கூடும் புண்ணிய நீர்ச்சந்தியுள்ளது. முனைக்குக் கிழக்கிலும்

தெற்கிலும் தென்மேற்கிலும் கற்பாறைகள் கடற் பரப்பின்மீது காணப்படுகின்றன. கரையை நோக்கிவரும் அலைகள் அப்பாறைகளின் மீது தாக்கிச் சிதைந்து வேகந் தணிந்து மதிலில்மோதி யலம்புகின்றன. மேற்கிலும் வடக்கிலும் நாட்டின் நிலப்பரப்பே காணப்படுகின்றது. முனையைச் சுற்றிலுமிருக்கும் கற்பாறைகளிடையே வெளிறிய பொன்வண்ண மணற்பரப்பின்மீது செம் மணலும் கருமணலும் அரிகளெனப் படிந்துள்ளன.

முனையின் மாலைக் காட்சியைக் காணவந்த சிலர், கல்மண்டபத்தில், மேற்குநோக்கி அமர்ந்திருந்தனர். யானும், அங்குற்று, ஒருபுறம் இருந்தேன். அலைகள் ஒல்லென ஓயாது ஒலித்துக் கொண்டிருந்தன. வானவெளியும் வெள்ளிப்புகைத் தொகுதி போன்ற முகிற்கூட்டங்களும் கடல்அலைகளின் பரப்பும் அவற்றின் சிதைந்து தெறிக்கும் நீர்த்துளிகளும் பொற்றட்டென ஒளிரும் கதிரவன் ஒளியில் பொன்னென மிளிர்ந்தன. இடையே காணப்பட்ட நீர்ப்பறவைகளும் திருக்கோயிலும் பல பொருள்களும் பொன்னொளி போர்த்துப் பொலிந்தன. கடலும் நிலமும் பொருந்திய வட்டப் பரப்பும் அதன்மீது கவிந்து நின்ற வானவெளியும் சேர்ந்து நல்கிய தோற்றம் ஒரு மாபெரும் பொற்பேழை போன்று திகழ்ந்தது. பொறுப்பும் வறுமையும் பூசலும் கவலையும் மேவும் வாழ்க்கையி லீடுபட்டு அமைதிகெட்டு, இன்னலுறும் மக்கள் திரள் திரளாகக் கூடிவாழும் நம்நாட்டின் தென்கோடியில் அமைதி மேவிநிற்கும் முனையில் அக்காட்சி இன்பமே நிலவும் பொன்னாடெனப் பொலிந்தது. இயற்கையின் வனப்பு இருந்தவாறுதான் என்னே!

அக்காட்சியின் திருவில் என் மனம் ஆழ்ந்திருந்ததாக, என்னை யான் மறந்தேன் போலும். இவ்வாறு சிறிது நேரம் கழிந் திருத்தல் வேண்டும். உணர்வு மீளும்போது அருகில் அமர்ந்திருந் தவர் உரையாடலின் குரலும் அலையோசையும் மெல்லென என் காதிற்பட்டன. பகலொளி பெரும்பாலும் மங்கியிருந்தது. மேற்கே, வானவெளியில் சிறிது படர்ந்திருந்த செவ்வொளி இருளொடு தோய்ந்து நின்றது. மண்டபத்திலிருந்த பிறர் நீங்கினர். இரவு மேவிற்று.

கீழ்வானத்திலிருந்த மதியின் ஒளி கிளர்ந்து பரவிற்று. கோள்களும் சில நாள்களுமே வானில் தென்பட்டன; பிற, நிலவொளியில் மறைந்து நின்றன. இருள் சிறிது செறிந்தது. படரும் நிலவொளி, வானவெளியிலும், திரையும் கடற்பரப்பின் மீதும், நிலப்பரப்பிலும் மேவி மிளிர்ந்தது. நிரம்பிய அமைதியினிடையில் மேவும் அலையோசை அவ்வமைதியின் வீக்கத்தையே உணர்த்திற்று.

அவ்விடை, மீண்டும் மீண்டும் ஓயாது திரைந்தும் எழுந்தும் சுருண்டும் மடிந்தும் விழுந்து அரற்றி யழுங்கும் கடற் பரப்பை நோக்கிக்கொண்டிருந்தேன். அங்ஙனமாகக் குமரிக் கண்டத்தைப் பன்னூறாண்டுகட்குமுன் கடல் மேவி யழித்தது என் நினைவிற்கு வரவும் அந்நிகழ்ச்சியின் காட்சி என் மன வெளியில் தோன்றிற்று. தென்கடல் பொங்கி நிலத்தைக் கவர்ந்திட, வாகுடை மாந்தரும் வனப்புடை மாதரும் வயங்கெழில் மக்களும் வடிவும் வண்ணமும் சாயலும் பீடுமுடைய புள்ளும் மாவும் பிற உயிரும் அல்லலுற்று மடியத் திருக்கோயில்களும் மாடமாளிகைகளும் மதிப்பிடற்கரிய முத்தமிழ் நூல் நிலையங்களும் பிற அருங்கலைச் செல்வங்களும் கல்லூரிகளும் பள்ளிகளும் அரங்குகளும் மன்றங்களும், அங்காடிகளும் துறைமுகவிடுதிகளும், களரிகள் பலவும், குடில்களும் சோலைகளும் பிறவும் கடலுக்குள் ஆழ்வதும், விளையும் அவலமும் கண்டு என் உள்ளம் திடுக்கிட்டுத் துயர்க்கடலுள் ஆழ்ந்தது. உணர்வு மீண்ட பின்னும் அவ்வவலக் காட்சி என் மனத்திரையினின்றும் அகன்றிலது. அலையோசையில், அவ்வவல நிகழ்ச்சியின்போது எழுந்த பல குரல்களும் கலந்திசைத்தன என்று உணர்ந்தேன்.

கலைகள் பலவும் மன்பதையின் நாகரிகமும் பிறந்த பழந்தமிழ் நாட்டிற்கு நேர்ந்த அவலந்தான் என்னை! கடலின் இகழ்ந்துபட்ட செயலின் கொடுமைதான் என்னை! பனிமலை வரையும் நிலவி நின்ற அவர் மொழியும் நாகரிகமும் வேற்று மொழி நாகரிகங்களினால் தாக்குண்டு உருமாறிப் பிற பெயர்களொடு வழங்கிடத் தமிழ்வழங்கும் பரப்பு மிகச் சுருங்கி மெலிந்த நிலைதான் என்னை! விளைந்த இன்னலும் இழப்பும் எத்துணையாம்! அளவிடற்குமாமோ! அன்பே வடிவான எல்லாம் வல்ல தெய்வத்தின் திருவுள்ளம் இருந்தவாறுதான் என்னே! என்னே!

ஓயாது திரிவதும் எழுவதும் கரையில் மோதி விழுந் திரைதலும் செய்யும் கடலின் பித்தங்கொண்ட தன்மை, அடாத செயலால் நிலத்தைக் கவர்ந்து அளவில்லாத இன்னலை விளைவித்ததன் பயனாகவே நேர்ந்தது போலும். காற்றில் மேவிய குளிர் மிகுந்தது. அமைதி கெட்டு அல்லலுறும் நெடுஞ்சொடு மெதுவாகப் பெயர்ந்து சென்று என் இருக்கை சேர்ந்தேன். துயிலும் வரையும், கடலுளாழும் தென் தமிழ்நாட்டின் அவலக்குரல், கடலிரைச்சலில் மேவி ஒலித்தலை யுணர்ந்தேன். எனவே, அவ்விரைச்சலைக்கேட்கும்போதெல்லாம் தூண்டப்பட்ட சுடர் போன்று என் வருத்தம் மிகுந்தது.

காலையி லெழுந்து, அறையிலிருந்தபடியே, பலகணியினூடு, மெல்லெனத் திரையும் கிழக்குக் கடலின் பரப்பைக் கண்ணுற்றேன். வெளியே, பலர் கதிரவன் தோற்றத்தைக் காண்பதற்குக் கூடியிருந்தனர். யானும் வெளிப்போந்தேன். நீலமும் பொன்னும் சிவப்பும் பிற வண்ணங்களுமுடைய சித்திர உடைகளை யணிந்த இளஞ் சிறாரும் மெல்லியன் மாதரும் அவருடன் போந்த மாந்தரும் தாழ்ந்த மதில் சுவரின்மீது அமர்ந்தவரும் நின்றவரும் பலர், கீழ்பால் திசையை நோக்கிய வண்ண மிருந்தனர். பனியின் மென்படலம் மேவிய வான வெளியும், இடையில் மெல்லெனத் திரியும் திரைந்த மணற் பரப்பை யொத்த முகிற் கூட்டமும், கடற் பரப்பும் மெல்லெனச் சிவந்து ஒளிரலாயின. ஒளி மேன்மேலும் மிகுந்தது. தண் பூங் காற்று மெல்லென வீசிற்று. கடற் பரப்பின் விளிம்பின் ஓரிடத்தில் மிகுந்த செவ்வொளி கிளர்ந்து பொலிந்தது. ஒரு நொடியில், மலரும் செந்தாமரையை யொத்துக் கதிர் வட்டத்தின் ஒரு பகுதி கடல் விளிம்பின் மீது தோன்றிற்று. பின், மெதுவாகப் பரிதிவானவன் முழு வட்டமும் நீலக்கடல் மீது செம்மணி போன்று நின்ற காட்சி, நீலமயிலின்மீது செவ்வேள் அமர்ந்த காட்சியொடு உவமிக்கும் திருமுருகாற்றுப்படையின் அடியை நினைவு கொளச் செய்தது. திருக்கோயில் மணி ஒலித்தது. அமைதியுடன் செஞ்ஞாயிற்றின் தோற்றத்தை நோக்கியிருந்தவர் பெயர்ந்து சென்றனர்.

அக்காட்சியைப் பிரிய இசையாத உள்ளத்தொடு பிரிந்து சென்று, முந்நீர்த்துறையில் நீராடிய பின், திருக்கோயிலை வலஞ் செய்து, கன்னித்தெய்வத்தை வணங்கி விடைபெற்று, என் இருக்கையை யடைந்து, அங்கிருந்தும் திருவனந்தபுரம் செல்வதற்கு வெளிப்போந்து, சாவடியின் முன் நின்ற பேருந்தில் அமர்ந்தேன்.

அங்ஙனமாகச் சிறிது நேரத்தில் பேருந்து நிற்கவும் புறத்தே நோக்கினேன். புராரியுடன் காத்தற்கடவுளான திருமாலும் ஒருசேரக் கோவில் கொண்டெழுந்தருளியுள்ள சுசீந்திரத் திருக்கோயிலின் அகன்றோங்கிய கோபுரத்தைக் கண்டேன். அக்கோபுரத்தைக் கண்டதும் தென்னாடு கடலுக்குள் மறைந்த போது வடநாட்டின் வடவெல்லையில், உலகிலேயே உயர்ந்த சிகரத்தைக்கொண்ட பனிவரை தோன்றிய நிகழ்ச்சி என் நினைவுக்கு வந்தது. நிலைத்த பேறு, அருட்பெரியார் மனதுக்கிசைந்த, கங்குல் பகலற நின்ற எல்லையில்தான் உள்ளது போலும்!

தென்னிந்திய தமிழ்ச்சங்கம், திருநெல்வேலி
தமிழ்ப்புலவர் மாணவர்தேர்வு

இச்சங்கச் சார்பில் 1955 பிப்ரவரி 21-ஆம் தேதிமுதல் 6 நாட்கள் சென்னை மாநிலப் புலவர் கல்லூரிகளிலும், நெல்லை, சென்னை, கம்பம் முதலிய இடங்களில் நடந்த தமிழ்ப்புலவர் மாணவர் தேர்வுக்கு விண்ணப்பித்தவர்கள்: வித்துவான் இறுதிநிலை 25, முதனிலை 41, புகுமுகம் 21 ஆக 87. எழுதாதவர்கள் 13, தேர்ந்தவர் 66. இவர்களில் முதற்றகுதியில் தேர்ந்த முதல் மூவர்கட்குமட்டும் அவ்வவ் வகுப்பு நிலையில் குறிக்கப்பெற்ற பரிசுத்தொகைகள் வழங்கப்படும். தேர்ச்சி யுற்றிருப்பவர்கள் அனைவருக்கும் சங்க முத்திரையுடன்கூடிய தகுதித் தாள்கள் வழங்கப்படும்.

வித்துவான் இறுதிநிலை

முதற்றகுதியில் முதன்மையானவர்

பதிவெண்	95.	மு. பழனிமுத்து, K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்	ரூ. 50
,,	90.	கு. இராமகிருஷ்ணன், 2-வது பரிசு ,,	ரூ. 35
,,	93.	வே. சின்ன சீனிவாசன், 3-வது பரிசு ,,	ரூ. 25

வித்துவான் முதனிலை

பதிவெண்	213.	பெ. லலிதாபாய், முதற் பரிசு திருவள்ளுவர் செந்தமிழ்ப் புலவர் கல்லூரி, நெல்லை.	ரூ. 40

வித்துவான் புகுமுகம்

பதிவெண்	185.	சின்னுக் கவுண்டர், கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்—முதற் பரிசு	ரூ. 20
,,	182.	சி. கண்ணுசுவாமி, பெரியகுளம், 2-வது பரிசு	ரூ. 15
,,	179.	இரா. இராமநாதன், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள். 3-ஆவது பரிசு	ரூ. 10

வித்துவான் இறுதிநிலையில் இரண்டாந் தகுதியில் தேர்ச்சியுற்றவர் வரிசை:

பதிவெண்	84.	சு சடையப்பன்,	K.V.S.S. கல்லூரி திருப்பனந்தாள்.
,,	92.	வீ. திருப்புளி	,,
,,	89.	R. வேதையா	,,
,,	91.	கு. இராமசாமி	,,
,,	88	கு. கிருஷ்ணன்	,,
,,	94.	இல. அண்ணுமலை	,,
,,	96.	க. இளங்கோவன்	,,
,,	86.	மு பாலகிருஷ்ணன்	,,
,,	85.	மா. முத்துக்கிருஷ்ணன்	,,
,,	101.	நா. ஆளவந்தார்	,,
,,	99.	வே. சிரஞ்சீவி	,,
,,	103.	பொ. முருகையன்	,,

மூன்றாந் தகுதியிற் றேர்ச்சியுற்றவர்கள்

பதிவெண் 102. மா. சுப்பிரமணியன்
K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்
„ 83. ரா. சானகிராமன் „
„ 87.ச. பரமசிவம் „
„ 107. வி. தா. சுப்பராய பிள்ளை, கரும்பூர்.
„ 104. அ. சற்குண பாண்டியன், கம்பம்.

வித்துவான் முதனிலை (இண்டர் D) யில் இரண்டாந் தகுதியில் தேர்ந்தவர் வரிசை

பதிவெண் 195. விமலா தங்கையா, (இண்டர் D) சாரா தக்கர் கல்லூரி, பாளையங்கோட்டை.
„ 180. சி. சுந்தரகிருஷ்ணன், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
„ 214. சாவித்திரி முத்தையா, திருவள்ளுவர் செந்தமிழ்ப் புலவர் கல்லூரி, நெல்லை.
„ 183. சு. கைலாசம், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்
„ 194. வயலா சார்லஸ் (இண்டர் D) சாரா தக்கர் கல்லூரி, பாளையங்கோட்டை.
„ 212. செ. கா அருணாசலம், கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

மூன்றாந் தகுதியில் தேர்ந்தவர் வரிசை

பதிவெண் 182. து. சோ. நடராசன், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
„ 175. வடுகராசன் „
„ 178. அ. துரைராசு „
„ 211. பி. தங்கராசன், கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
„ 210. ஆ. பி. வெள்ளையப்பன், சாந்தலிங்க அடிகள் கல்லூரி, பேரூர்.
„ 179. கோ. அழகிரிசாமி, K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
„ 201. க. நாகரத்தினம், சாந்தலிங்க அடிகள் கல்லூரி, பேரூர்.
„ 185.ச மா. ஈசுரன், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
„ 200. க. சுப்பிரமணியன், சாந்தலிங்க அடிகள் கல்லூரி, பேரூர்.
„ 181. R. அரங்கநாதன், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
„ 176. உ. கோவிந்தசாமி, K. V. S. S. „
„ 202. முருகேசன், சாந்தலிங்க அடிகள் கல்லூரி, பேரூர்.
„ 174. கி. வேங்கடராமன், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
„ 196. இராமலக்குமி சங்கரராமன், (இண்டர் D) சாரா தக்கர் கல்லூரி, பாளையங்கோட்டை.

பதிவெண் 204. சுப்பிரமணியன், சாந்தலிங்க அடிகள் கல்லூரி, பேரூர்.
,, 193. வே. கனகசபாபதி, கம்பம்.
,, 177. திருமூர்த்தி, K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
,, 208. வெ. தனபாலன், சாந்தலிங்க அடிகள் கல்லூரி, பேரூர்.
,, 206. ந. பொன்னுசாமி ,, ,,
,, 205. ப. பொன்னுசாமி ,, ,,
,, 199. தி. வ. கலியாணசுந்தரம், (இண்டர் D) ம. தி. தா. இந்துக்கல்லூரி, நெல்லை.
,, 207. மா. கோடீசுரன், சாந்தலிங்க அடிகள் கல்லூரி, பேரூர்.

வித்துவான் புதுமுகத்தில் இரண்டாந் தகுதியிற் றேர்ந்தவர் வரிசை

பதிவெண் 175. அ. சிவசுப்பிரமணியன், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
,, 184. M. A. இராமசாமி, கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
,, 168. பொ. முத்து, K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.

வித்துவான் புதுமுகத்தில் மூன்றாந் தகுதியிற் றேர்ந்தவர் வரிசை

பதிவெண் 183. ச. சுப்பிரமணியன், கம்பம்.
,, 176. K. ஞானசம்பந்தம், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
,, 170. சி. அ. அனந்தராமன், ,,
,, 171. சி. சொக்கன், ,,
,, 173. சு. இராசமாணிக்கம் ,,
,, 165. K. G. தியாகராசன், ,,
,, 174. கா. மாரிமுத்து, ,,
,, 178. N. சோமசுந்தரம், ,,
,, 181. க. முத்தையன், ,,
,, 166. வி. சிவலிங்கம், ,,
,, 169. வ. முத்துசாமி, ,,

தெ. த. சங்கம்,
நெல்லை,
7-5-55.

பு. சி. புன்னைவனநாதன்,
புலவர்குழுத் தலைவர்.

திருக்குறள் தண்டபாணி விருத்தியுரை

(சிலம்பு - உக, பரல் - க, பக்கம் - ௪0௪-இன் தொடர்ச்சி)

அதிகாரம் - ௪உ

அறிவுடைமை*

அஃதாவது அவனவும் ஆகாதனவும் பகுத்தறிதல் உடைய னாதல். இது கல்வி கேள்விகளான் ஆதலின் ஈண்டு வைக்கப் பட்டது. எனவே, அதிகார முறைமை பெறப்பட்டது.

இவ் வதிகாரத்தில், அறிவினது சிறப்பும், இலக்கணமும், அறிவுடையார திலக்கணமும், அறிவுடையார் எய்தும் நன்மை யும், அறிவுடையார்க்கும் அறிவிலார்க்கும் உள்ள வேறுபாடும் முறையே கூறுவான் வைத்த ஆசிரியர் முதற்கண் அறிவினது சிறப்புக் கூறுகின்றார்.

௪உக. அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
உள்ளழிக்க லாகா வரண்.

(இ - ள்.) (ஒருவனுக்கு) அறிவு - அறிவானது, அற்றம் காக்கும் - கேடு (வராமல்) காக்கும், கருவி - படைக்கருவி (போல்வதாம்); (அஃதேயன்றி) செறுவார்க்கு - (கெடுக்கக் கருதி வரும்) பகைவர்க்கு, உள் அழிக்கலாகா - உள்ளே (புகுந்து) அழிக்க முடியாத, அரணும் - அரணும் (போல்வதாம்). (எ-று.)

(இ - து.) கேட்டைக் கெடுக்கும் கருவியும் கேட்டைத் தடுக்கும் அரணும் போல்வது அறிவு. (எ - ம்.)

செறுவார்க்கும் என்பதில் உள்ள உம்மை அரணுக்குப் பிரித்துக் கூட்டப்பட்டது. 'அளக்கலாகா உள்ளரண்' எனக் கூட்டிப் பொருள் கொண்ட ஆசிரியர் பரிமேலழகரும் மேல் நின்றவாறே வைத்துப் பொருள் கோடலை உடன்பட்டார்.

கேடென்றது உயிர்க் கேடு பொருட் கேடு முதலாய இம் மைக் கேடுகளையும் மறுமைக் கேட்டையும் குறிக்கும். படைக் கருவி இயங்கிக் காப்பது; அரண் நிலைத்துக் காப்பது. அறிவு சூழ்ச்சியாய் இயங்கியும் தன்னளவாய் நிலைத்தும் கேடுவராமற்

*இஃதோடு தண்டபாணி விருத்தியுரை முடிவுறுகின்றது. இதற்கு மேல் எழுதியன கிடைக்கப் பெறவில்லை.

காத்தலின், கருவியுமரணும் போல்வதாயிற்று. செறுவார் என்றது புறப்பகைவரையே யன்றிச் செருக்குஞ் சினமும் முதலாய அகப் பகைவரையுமாம். என்னை? வருமதிகாரத்திற் 'குற்றமே காக்க பொருளாகக் குற்றமே - யற்றந் தரூஉம் பகை' (குறள், சருச) என்பாராகலின்.

சிறப்புப்பற்றி அரசர்க்குரியனவாக அரசியலிற் கூறப்பட்ட பலவும் பிறர்க்கும் ஒவ்வுமென முற்கூறிய தீண்டுத் தெளிய விளங்குமாறு காண்க.

அறிவினது சிறப்புக் கூறியதிது. (க)

இனி வரும் ஐந்து குறள்களால் அறிவினது இலக்கணங் கூறுவான் வைத்து, அறிவுதான் உள்ளம் பற்றியும் உரைபற்றியும் செயல்பற்றியும் நிகழ்தலின் அம் முச் சார்பின் முதலதான உள்ளத்தினைப் பற்றி நிகழும் அறிவினது இலக்கணத்தை வருங் குறளாற் கூறுகின்றார்.

சஉஉ. சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு.

(இ - ள்.) (உள்ளத்தை) சென்றவிடத்தால் - (அது) செல்லும் வழியிலெல்லாம், செலவிடாது - செல்லவிடாமல், (நல்வழியும் தீவழியும் அறிந்து) தீது ஒரீஇ - தீயவழியினின்று (அதை) நீக்கி, நன்றின்பால் - நல்ல வழியில், உய்ப்பது - செலுத்துவது, அறிவு - அறிவாம். (எ - று.)

(இ - து) மனத்தை அதன் விருப்பத்தின் வழியே செல்லவிடாமல் நல்வழியிற் செல்லவிடுவது அறிவு. (எ - று.)

செல்லும் எனற்பாலது சென்ற என இறந்த காலமாக நின்றது, மயங்கு மொழிக் கிளவி யாதலின்; 'இறப்பே யெதிர்வே யாயிரு காலமுஞ் - சிறப்பத் தோன்று மயங்கு மொழிக் கிளவி' என்பது தொல்காப்பியம்—வினையியல்—சூத்திரம் ருo. இடம் என்றது நெறியை. இடத்தால் என ஏழாவதன் பொருண்மைக்கண் மூன்றாவது மயங்கிற்று. விடாமல் எனற்பாலது ஈறுகெட்டு நின்றது. தீது நன்று என்பன அவ்வந் நெறியைக் குறித்து நின்றன. 'உய்ப்பது' என்னுஞ் சொற்குறிப்பால், குதிரையை நெறியறிந்து உய்ப்பான் பாகனாதல் போல, உள்ளத்தை நெறியறிந்து உய்ப்பது அறிவு என உவமங் கொள்ளப்படும். உள்ளம் என்னும் செயப் படுபொருள் வினைக் கியைபாதல் நோக்கி வருவித்துரைக்கப்பட்டது.

உள்ளத்தின் சார்பாக நிகழும் அறிவினதிலக்கணங் கூறிய திது. (௨)

உரையின் சார்பாக நிகழும் அறிவினதிலக்கணங் கூறுவான் வருவன வருமிரு குறள்கள்.

௪௨௫. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(இ - ள்.) எப்பொருள் - யாதொரு பொருளை, யார்யார் வாய் - யாவர் யாவர் சொல்ல, கேட்பினும் - கேட்டாலும், அப்பொருள் - அந்தப் பொருளின், மெய்ப்பொருள் - மெய்யான உண்மையை, காண்பது - காணவல்லது, அறிவு - அறிவாம். (எ - று.)

(இ - து.) யார் எதைச் சொன்னாலும் அதில் உண்மைப் பொருளைக் காணவல்லதே அறிவு. (எ - ம்.)

யார் யார் என்ற அடுக்கு பன்மை பற்றி வந்தது.

அறிவு உயிர்க் குணமாதலால் அஃது இன்னார் இனியார் என்னாது எல்லாரிடத்தும் காணப்படும். அற்றேல் அறிவுடையார் அறிவிலார் எனப் பகுக்குமா றென்னையோ வெனின், காணப்படும் அறிவின் மிகுதியுங் குறைவுங் குறித்த தப் பாகுபாடே யன்றிப் பிறிதில்லை யென்க. என்னை? 'குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண் - மிகைநாடி மிக்க கொளல்' (௫0௪) என்றார் ஆசிரிய ராகலின் என்பது. அஃதாகவே, 'எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண் - மெய்ப்பொருள் காண்ப தறிவு' (குறள், ௩௫௫) ஆதலான் எவரும் ஒரொருகால் ஒரு சிறிதளவேனும் மெய்ப்பொருள் காண்டல் இயலும். கண்டால் அவர் உரையில் அவர் கண்ட மெய்ப்பொருள் விரவிக்கிடத்தலும் இயலும்.

அஃதேயுமன்றி முக்குணங்களும் மாறி மாறி வருதலின் அறிவான் மிக்காரிடத்தும் ஒரொருகால் உள்ளீடின்றி வெளிறிய பொய்ப்பொருள் காணப்படுதலும் இயலும். என்னை? 'அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கா - லின்மை யரிதே வெளிறு' (௫0௩) என்றார் ஆசிரிய ராகலி னென்பது. ஆகவே, உரைப்பாரது உயர்வு தாழ்வு குறியாது அவர் உரையினை ஆராய்ந்து அதன்கண் காணப்படும் மெய்ப்பொரு ளுண்டேற் கொண்டு இல்லையேற் றள்ளுதலே அறிவுடைமை என்பதாயிற்று.

அறிவுடையார் அறிவிலார் என விதவாது யார் யார் எனப் பொதுப்படக் கூறினமையின், புகழ்வார் இகழ்வார் எனவும் நட்டார் பகைவர் எனவும் பெரியார் சிறியார் எனவும் வேறு பிறவாற்றானும் வேற்றுமை குறியாது அவரவர் கூற்றினை ஆராய்ந்து அக் கூற்றின்கண் உள்ள மெய்ப்பொருளைக் கொள்வது அறிவு என்பதாயிற்று. என்னை? ஒரோவழிப் புகழ்ச்சியிற் பொய்யும் இகழ்ச்சியில் மெய்யும் நண்பருரையிற் கேடும் பகைவர் உரையில் நன்மையும் பெரியார் உரையில் வெளிற்றறிவும் சிறியார் உரையில் மெய்யறிவும் காணக்கிடத்தலினென்பது. இதுபற்றியன்றே ஆசிரியர், 'புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை, இகழ்வாரை நோவ தெவன்' (உ௩௭) எனவும், முகத்தினினிய நகாஅ வகத்தின்னா, வஞ்சரை யஞ்சப்படும் (அஉச) எனவும், 'உருவு கண்டெள்ளாமை வேண்டு முருள் பெருந் தேர்க், கச்சாணி யன்னா ருடைத்து' (சகூஎ) எனவும்,..........

நால்வர் திருமணிமாலை

[திரு. சிவானந்த சுவாமிகள்]

காப்பு

நேரிசை வெண்பா

செப்பரிய மெய்ஞ்ஞான சம்பந்தர் சேவடியை
அப்பர் திருவடியை ஆரூரர்—ஒப்பில்
கமலத் திருவடியை வாதவூரர் காலை
நிமல மனமே நினை.

விநாயக வணக்கம்

தெற்கு முகமாகித் தென்கூடல் வீற்றிருக்கும்
முக்குறுணி ஐங்கரனும் முன்னிற்க—சற்குருவும்
நால்வர் புகழ்மாலை நான்பாட நாமகளும்
சால்புபெற நிற்கவே தான்.

திருஞானசம்பந்தர்

கட்டளைக் கலித்துறை

பூவே நிறைந்தசுற் பொய்கையிற் பாலுண்ட புண்ணியமே
பாவே யருமறை பாமெனப் பாடிய பாவலனே
கோவே திருமரு மார்பனும் வேதனுங் கொண்டுதொழுந்
தேவே திருஞான சம்பந்த னென்னுமெய்த் தேசிகனே. (க)

(தொடரும்)

தமிழ் எழுத்துக்களின் சிறப்பு

[சைவப்புலவர், இராவ் சாகிப், டாக்டர் தி. இரா. அண்ணாமலைப் பிள்ளை, L. M. S. S. A., M. R. A. S. LOND.,]

தமிழ் நெடுங்கணக்கு—முறை, நிலை, உருவம் மாத்திரை முதலியன

கடந்த சில ஆண்டுகளாக, தமிழ் எழுத்துக்களைப்பற்றி, பொதுவாய், 'செந்தமிழ்ச் செல்வி,' 'தொண்டன்' முதலிய வெளியீடுகளில், எம் கருத்துக்களைத் தெரிவித்துள்ளோம். இனி, சில நுண்ணிய குறிப்புக்களை இங்கு எடுத்துரைப்பது எமது நோக்கம். தமிழ் எழுத்துக்களின் வரிசை, தமிழில் 'தமிழ்நெடுங்கணக்கு' என்றும் ஆங்கிலத்தில் 'Tamil Alphabet' என்றும் அழைக்கப்படும். இவண், இனி எடுத்துரைக்கப்படும் பொருள்களை 'சிறப்புக் குறிப்புக்கள்' என்றழைப்பது பொருத்தம். இங்குக் கூறப்படும் பொருளை, மக்கள் எல்லாரும் எளிதில் அறிவதே எமது குறிக்கோள் ஆதலின், மிக எளிய நடையில் எழுதுவதே எமது பேரவாவுமாகும்.

தமிழ் எழுத்துக்கள் - முற்கூறிய பொதுக்குறிப்புக்களைப் தொகுத்துக் கூறல்

இன்று தமிழகத்தில் நிலவுகின்ற நூல்களில், மிகப் பழமையானது தொல்காப்பியம் என்பது யாவரும் அறிந்ததே. இற்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐந்நூறாண்டுகளுக்கு முந்தியதென்று தமிழ்ப்பேரறிஞர் பலர் கணக்கிடுகின்றனர்; ஐயாயிரம் ஆண்டுக்கு முற்பட்டதென்றும், எண்ணாயிரம் ஆண்டுக்கு முந்தியதென்றும் ஒரு சிலர் கூறுகின்றனர்.

பண்டைத் தொல்காப்பியர் குடியில், தோன்றிய புலவர் ஒருவரால் எழுதப்பட்டமையால் தொல்காப்பியம் எனப் பெயர் பெற்றதென்பார் சிலர்; இன்னும் தொன்மை+காப்பியம்= தொல்காப்பியம் என்று பிற்காலத்தவரால் அழைக்கப்பட்டதென்று கூறுவாரும் உளர். எங்ஙனமாயினும், இந்நூல் திருக்குறளுக்கும் கடைச்சங்க இலக்கியங்களுக்கும் முந்தியதென்பதை தமிழறிஞர் யாவரும் ஒருங்குசேர ஒப்புக்கொள்வர்.

இந்நூலில் எடுத்தோதப்பெற்றபடி, தமிழ்நெடுங் கணக்கு - எழுத்துக்கள், உயிர் - 12, மெய் - 18, சார்பெழுத்து-3 ஆக முப்பத்து மூன்று (33) எழுத்துக்களாலாயது என்று கூறப் பட்டுள்ளது. இந்த 33 எழுத்துக்களும் முப்பத்து மூன்று ஓசை களைக் குறிக்கும். தமிழ்எழுத்துக்களுக்கு உருவங்கள் தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரேயே ஏற்பட்டுள்ளன. எழுத்துக்களின் உரு வங்களைப்பற்றியும், எழுத்துப் புணர்ச்சிகளில் அவ்வெழுத்துக் களில் ஏற்படும் உருவ மாறுதல்களைப்பற்றியும், பல குறிப்புக்கள் தொல்காப்பிய நூற்பாக்களிற் காணப்படுகின்றன என்பதில் ஐய மில்லை. தமிழ் எழுத்துக்கள் உயிர், மெய் (உடல்), உயிர் மெய் சார்பு என வகுக்கப்பட்டதற்கு அடிப்படையான ஏது (கார ணம்), அக்காலத்தில் நிலவிய சமயக் கருத்துக்கள் (Religious Ideas) என்றே கூறலாம். உயிர் எழுத்துக்கள் 12-ம் ஒரு சுழி யில் (வட்டம்) தொடங்குகின்றன. உயிர் எழுத்துக்களில் ஒன்று கிய 'ஓ' என்னும் எழுத்து ஓங்காரம் (பிரணவம்) என்னும் மூல ஓசைக்கு முதலாய் நிற்பது. இந்த 'ஓ' என்னும் எழுத்து தனது வடிவத்திலேயே ஓங்காரத்தின் உட்பொருளைச் சுட்டிக் காட்டி நிற்பது, தமிழ் எழுத்துக்களுக்கே தனிச் சிறப்பாகும். குற்றிய லுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்னும் மூன்று சார்பெழுத் துக்களில் ஆய்த எழுத்து தனி நிலையாய் உயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் பிடையும் (சேர்க்கும்) தகுதியுடைய தாய், கனத்த ஓசைகளை மெல்லோசைகளாய் ஆக்கக்கூடிய ஆற்ற லுடையதாய் நின்றிலங்கும் தனிப்பெருஞ் சிறப்புடையது.

மெய்யெழுத்துக்கள் 18-ம், வல்லினம் - 6, (க, ச, ட, த, ப, ற), மெல்லினம் - 6 (ங, ஞ, ண, ந, ம, ன), இடையினம் - 6 (ய, ர, ல, வ, ழ, ள) என்று மூன்று தொகுதிகளாய் (கணங்கள்) வகுக்கப்பட்டுள்ளன. இன்னும், க - ங, ச - ஞ, ட - ண, த - ந, ப - ம என்னும் இரண்டிரண்டு எழுத்துச்சேர்ந்த இரண்டினங் களும், ய, ர, ல, வ, ழ, ள என்னும் ஆறெழுத்துச் சேர்ந்த ஓரின மும் ஆக மூன்று இனங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இடையின எழுத்துக்கள் ஆறினில், 'ய'—'வ' என்னும் இரண்டு எழுத் துக்கள் 'உடம்படு மெய்'யாயும் வரும்.

தமிழ் எண்களைக் குறிக்கும் குறியீடுகள்—(௧, ௨, ௩, ௪, ௫, ௬, ௭, ௮, ௯, ௰) தத்தம் உருவத்திலேயே சில குறிப்புக் களை சுட்டிக் காட்டி நிற்கின்றன. உலகில் நிலவும் எந்த மொழியில் உள்ள ஓசையையும் தமிழில் ஒலிக்கவும் எழுதவும் முடியுமென்பதை, உண்மை ஆராய்ச்சிப் புலவர் உயர்திரு. பா. வே. மாணிக்க நாயக் கர் அவர்கள் B. E., M. C. I. (Retd. Superintending Engi- neer) பல அரங்கங்களில் (மேடை) மிகத் திறம்பட எடுத்துக்

காட்டி யுறுதிப்படுத்தியுள்ளார்கள். கூர்ந்து நோக்குவார்க்கு, தமிழ் நெடுங்கணக்கெழுத்துக்கள் இறைவன், உயிர், உலகம் என்னும் முப்பொருட்களையும் சுட்டி நிற்கின்றன; முப்பத்து மூன்று என்னும் எண், சங்கஇலக்கியங்களிலும் சமயநூல்களிலும், கோயிற் கொடிமர அமைப்பு, மனித உடல் முதுகெலும்பு இயற்கை, இவை போன்ற பல இடங்களில் சிறப்புற்றுக் காணப் படுவதால், பண்டைத் தமிழர் முப்பத்து மூன்று என்னும் எண்ணைத் தனிச் சிறப்புள்ள எண்ணாக மதித்து வந்தனர்; தமிழகத்தில் முப்பத்து முக்கோடிதேவர் (33 கோடி) என்னும் தூய சொற்றொடர் இன்றும் வழக்கில் இருந்து வருகிறது. திருவள்ளுவர் 1330 குறட்பாக்களைப் (1000 + 33 × 10) பாடி அமைத்ததே முப்பத்து மூன்றின் சிறப்பை மிளிரச் செய்கின்றது.

தொல்காப்பியர் ஓதியுள்ள பல நூற்பாக்களில் இலக்கண விதிகள் மட்டுமல்ல, அக் காலத்துச் சமயக் கருத்துக்களும் அடங்கியுள்ளன. இவைபோன்ற எமது பல பொதுக் குறிப்புக்கள் விரிந்த முறையில், தக்க சான்றுகளோடு அச்சேறி வெளிவந்துள்ளன. இவைகளையும், இனிவரும் எமது சிறப்புக் குறிப்புக்களையும் நுழைபுலமிகுந்த பெரும் புலவர்கள் ஆராய்ச்சி முறையிற் சிந்தித்து முடிவு கட்ட வேண்டுமென்பது எமது வேண்டுகோள்—நிற்க.

சிறப்புக் குறிப்புக்கள்—சித்திர எழுத்துக்கள்

உலக மக்கள் யாவரும் தத்தம் எண்ணங்களை நேரிற் சைகை காட்டியும் பேசியும் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள். ஆனால், நேரிற் பேச முடியாதபொழுது, ஒருவர்க்கொருவர் எழுதித் தெரிவித்துக் கொள்வது இயற்கையே யாகும். இங்ஙனம் தங்கள் எண்ணங்களை யெழுதிக் காட்டுவதில் முதல் முதலில் சித்திரத்தை (படம்) வரைந்து அதன் பொருளைக் குறிப்பிட்டுக் காட்டுவது மக்கள் ஆதியிலிருந்து கையாண்டு வரும் எளிய முறை என்பது மனித வரலாறு. ஒருவர் ‘கண்’ (Eye) என்னும் உறுப்பைக் குறிப்பிட எண்ணுகிறார். ‘கண்’ போன்ற ஒரு படத்தை அவர் எழுதிக் காட்டுகின்றனர். கண்ணைச் சித்திரித்துக் காட்டுவதால், அதைச் ‘சித்திர எழுத்து’ என்று கூறுவர். ஓர் ‘ஆள்’ என்று காட்டுவதற்கு, ஒரு மனித உருவத்தைப் படமாக எழுதிக் காட்டுவர். இவ்வண்ணம், படத்தை யெழுதி, பொருள்களையும் எண்ணங்களையும் தெரிவிப்பதைத்தான், ஆங்கிலத்தில் (Pictographic Writing) என்றழைப்பர். இதுபோன்று, சித்திரம் எழுதிக் காட்டும் முறை, பண்டைக் காலத்திலிருந்தே மக்கள் யாவராலும் கையாளப்பட்ட இயற்கையான பழக்கம் என்

பது எளிதிற் புலனாகும். ஓடுகின்ற மனிதனைப்போல், ஒரு தொழிலைச் சித்திரித்துக் காட்டுவது ஓடும் வினையைக் காட்டும் பட எழுத்தாகும். ஏறத்தாழ எல்லா மொழிகளிலும், பொதுவாகச் சித்திர எழுத்துக்களே முதலில் தோன்றின. இங்ஙனம் படத்தை வரைந்து காட்டுவதைத்தான், படஎழுத்து, சித்திர எழுத்து, கண் எழுத்து, உருவ எழுத்து என்றெல்லாம் அழைப்பர்.

மோகஞ்சதரோ—சித்திர எழுத்துக்கள்

நமது இந்திய நாட்டின் வடமேற்குப் பாகத்தில், சிந்து நதிக் கரையோரங்களில் (The River Indus) பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே, தோன்றிச் சிறப்புற்றிருந்த பல நகரங்கள், ஆற்றின் வெள்ளப்பெருக்கு முதலிய ஏதுக்களால் அழிந்து போயின.

அங்ஙனம் மறைந்த நகரங்களைத் தோண்டியெடுத்து அதில் அகப்படும் பொருள்களைச் சோதித்துப்பார்த்து அங்குள்ள பண்டை நாகரிகத்தை அறிவது நல்ல படிப்பாகும். மாட்சிமை தங்கிய நம் அரசாங்கத்தார் சிந்து ஆற்றுப் பக்கங்களில் விளங்கிய மொகஞ்சதரோ, கரப்பா என்னும் ஊர்களைத் தோண்டியெடுத்துப் பார்ப்பதற்கான வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனர். நீடூழி வாழ்க. அங்கு அகழ்ந்து (தோண்டி) எடுக்கப்பட்ட பொருள்களில், சித்திர எழுத்துப் பொறித்துள்ள பல முத்திரைகளும் (Seals) அகப்பட்டுள்ளன. இப் பொருட்களை ஆராயும் ஆற்றல் வாய்ந்த புலவர்கள் (Geologists, Archaeologists) மொகஞ்சதரோ நாகரிகம் இற்றைக்கு ஐயாயிரம (5000) ஆண்டுகளுக்கு முற்பட்டதென்று முடிவுகட்டியுள்ளார்கள். இதைப் பற்றிய முதன்மையான குறிப்பாக இங்கு மனதிற் பதிக்கத் தக்கது என்னை? மேற்கூறிய மொகஞ்சதரோ முத்திரைகளிலும் சித்திர எழுத்துக்களே காணப்படுகின்றன.

(தொடரும்)

போற்றி வழங்கும் நெறி

[திரு. தென்மொழி ஞானபண்டிதன், ஆனைமலை.]

அறிவு பல படைத்த ஆன்றோர்களை ஈன்றெடுத்த இவ்வுலகம், அறிவற்ற பொருள்களையும் தன்னகத்தே கொண்டு தான் விளங்குகிறது. எத்தனையோ உயிருள்ள பொருள்கள் தோன்றி இருந்து, மறைந்து வரும் பெருமைக்குரிய இவ்வுலகில் உயிரல்லாத பொருள்களும் தோன்றியும், இருந்தும், மறைந்தும் வருகின்றமையை நாம்—எல்லாவற்றினும் சிறப்பு நிலையிலே வாழ்ந்து வரும் மனித இனமாகிய நாம்—நன்கு அறிவோம்! இவ்வாறு வாழ்ந்தும் அறிந்தும் வருகின்ற நமக்கு ஏனையவற்றினும் சிந்தித்து அதாவது பகுத்தறியும் அறிவு இயல்பாகவே அமைந்துள்ளமையால் அப் பேற்றை என்னென்பது? இதுவன்றோ பெறுதற்கரிய பிறப்பும் பேறுமாகும்!

இவ்வாறு பெற்ற பிறப்பும், கிடைத்த பேறும் நற்றவச் செயல் என்பதன்றி வேறு கூறுதற்கு உளதென்னை? இந்த நிலையில் உலகத்து ஏனைய மக்களுள்ளும தமிழகத்து வாழ்ந்த ஆன்றோர்கள் பன்னெடுங் காலந்தொட்டே போற்றி வழங்கு நெறியில் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை நாமேயன்றி உலகத்து ஏனையோராலும் மறுக்கவோ, மறக்கவோ முடியாததொன்றாகும்! இதனை இற்றை நாள் வாழ்ந்து வருகின்ற நாம் நன்கு உன்னுதல் வேண்டும்! பிறர் வாழ்வில் நலங்கண்டு மகிழ்ந்த தமிழகத்து ஆன்றோர் பலர் வாழ்ந்துள்ளனர்; பிறர்க்காகும் துன்பங் கண்டு மனம்பொறாது, அத்துன்பத்தினைத் துடைத்த பெருமக்கள் நம் தமிழகத்தே வாழ்ந்திருக்கின்றனர் என்பதையும் நாம் நன்கு அறிவோம்! இறவா மருந்தே எய்தினும் தனித்துண்ணும் எண்ணமும் இல்லாதவராக, பொறையுளங் கொண்டு உழைப்பாற் கிடைப்பது நீருணவேனும் மகிழ்வுடன் உண்பவராகத், 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் உயர்நோக்கங் கொண்டவராக, பகை, பாவம், அச்சங்களுடன் கூடிய பழியினுக்கு அஞ்சுபவராக, 'என்றும் முயற்சியாற் பொன்றுவதொன்றில்' என்னுங் குறிக்கோளே தம் வாழ்வின் உட்கோளாகக் கொண்டு வாழ்ந்த ஆன்றோர்கள் நம் முன்னோர்களிலே பற்பலராவர்! இக்கூற்று வெறும் புகழ்ச்சியன்று; உண்மை! ஓர்ந்து கற்று உணர்ந்து தெளிவீர் தமிழ்த் தோழர்களே!

சங்க காலத்து நூல்களுள் எட்டுத் தொகையுள் ஒன்றாகிய புறநானூற்றைக் காணுங்கள்! படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆகியவைகளெல்லாம் அமைந்த நலத்தைக் காண

வேண்டுமா? அன்றி இவற்றையெல்லாம் கொண்டு விளங்கிய அரசருள் ஏறெனை வாழ்ந்த மன்னனைக் காணவேண்டுமா? இன்னும் கூரிய வேலேயாயினும் தன் கண்ணின் நேர் எதிராக விரிட்டுப் பாய்ந்து வருவதால் அதுகண்டு அக்கண் இமையை இமைத்தலால் தோல்விப் பேறுகிவிடுமென்று அஞ்சி எதிர்த்து நிற்கும் வீரனைக் காணவேண்டுமா? முன்னாட் போரில் தன் கொழுநனையிழந்தும், உள்ளவன்—அருமையாக வளர்க்கப்பட்ட மகன் ஒருவனே என்பதையும் எண்ணாது, மறுநாட் போருக்கு அம்மகவை அனுப்பி அவனும் வீரமரணம் எய்தியது கண்டு மகிழ்ந்த வீரப் பெண்மணியைப் பற்றியும் அறியலாமே! இஃதோடுமட்டுமா! கல்வி, கேள்வி, பொருட் செல்வங்களிலும் குறைந்தவர்களல்லவே நம் முன்னோர்கள்! அவர்கள் வாழ்ந்த காலம் இறைவனைத் தலைவனாகக் கொண்டு வாழ்ந்த காலமல்லவா?

'நெல்லும் நீரும்தான் உலக வாழ்வுக்கு உயிராகும் என்பதை மறுத்து வேந்தனாகிய உயிரையுடைத்து, பரந்த இவ் விடத்தையுடைய யுலகம்' என்பதனைத் தெளிந்த குடிமக்கள் இங்குத்தானே வாழ்ந்திருக்கின்றனர்! 'எந்த நாடாக இருப்பினும் அன்றிக் காடாக இருப்பினும் என்? ஒன்றின் பள்ளமாக இருந்தாலும் இருக்கட்டும் அல்லது மேடாக இருந்தாலும் இருக்கட்டுமே! ஆனால், எந்தப் பகுதியில் போற்றி வழங்கு நெறியினுக் குரித்தான மகன் ஒருவன் வாழ்கின்றானோ அவனாலன்றோ அப் பகுதிக்கு - அந்நாட்டினுக்குப் பெருமை கிடைப்பதாகவிருக்கிறது? அத்தகைப் பெற்றியானைக் கொண்டுள்ள நிலமே நீ நன்று வாழ்வாயாக' என வாழ்த்திய பெருந்தகை மக்களும் நம்மவரன்றோ? இந்த உண்மையை,

> 'நாடா கொன்றோ காடா கொன்றோ
> அவலா கொன்றோ மிசையா கொன்றோ
> எவ்வழி நல்லவர் ஆடவர்
> அவ்வழி நல்லை வாழிய நிலனே!' —புறம் : ௧௮௭.

என ஔவை முதியாரின் வாயிலாக நாம் அறியக் கிடக்கிறது. இதன் உண்மைக்கு இலக்கானவர் நம் பழந்தமிழரேயாவர் என்பதையும் நாம் நன்கு உணரவேண்டும்.

இத்தகைய பெருமைக்குரியவர் யாரோ அவரே போற்றி வழங்கு நெறிக்குரியவராவரன்றோ? ஆம். இந்தப் பிறப்பின்கண் ஒரு செயலைச் செய்வதால், இனிமேல் எய்தும் பிறப்பிற்கு உதவிகிட்டும் என்ற எண்ணங்கொண்டு தன்னிடத்துள்ள பொருளை விலையாகக் கொடுத்து அதனால் அறங்கொள்ளுகின்ற

ஒரு வாணிகனாக இருந்தவனல்ல. 'நன்னெறிப்பட்ட சான்றோர்கள் சென்ற வழியே நாம் ஈயும் பொருளும் செல்வதாக' என்ற எண்ணத்தோடு கொடுக்கும் பண்பு வாய்ந்தவனாக வாழ்ந்த பெருமகன். அவனது வள்ளன்மையும் அதன் பாலதேயாம். அந்தப் பேற்றினுக்குரிய தமிழ் மகன் யாவன்? அவன்தான் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்னும் முதுபெரும் புலவரால் பாடப்பெற்ற வள்ளலாகிய ஆய்மன்னன். இதோ,

'இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆயலன் பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன் றவன்கைவண் மையே!' —புறம் : ௧௩௪

இப்பண்பினையே வள்ளுவர் பெருமானும்,

"....................மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று"

என்றார்.

மேலும், அறஞ்செய்வதும் காலந் தாழ்த்திச் செய்யலாமென்னாது, இயலுமளவிற்கேனும் அப்பொழுதே செய்தல் வேண்டுமென்பதை நாலடியார்,

'இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
யொருவுமின் றீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டார் அறம்.'

என்று வலியுறுத்துவதோடு, தீயனவற்றை நீக்கி எந்த வேளையிலும் நாம் இறத்தற்குரியவர் என்றமனத்தினராய் அவ்வறத்தைச் செய்யவேண்டுமென்றும் கூறுகிறதன்மை நம் பண்டையோர் பண்பாட்டைத்தெளிவுபடுத்துவதாகும். இதனையே,

'அன்றறிவா மென்னாது அறஞ்செய்க; மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.'

என்று தமிழ் மறையும் கூறுகின்றமை எத்தகைய பொருத்தமுடையதென்பதை உன்னுக! உன்னுக! உன்னித் தெளிக!

இந்த நிலை, செல்வம் படைத்த வள்ளல்களுக்கோ அல்லது செருவென்ற மன்னர்களுக்கோ உரியசெயலென்று நாம் எண்ணுதற்கிடமில்லை. வறுமையே தமது உடைமையாமென வாழ்ந்த பொறுமையாம் பெரும்புலவர்களிடத்தும் இவ்வறச் செய்கை மிக்கிருந்தமையை நாம் அதே புறநானூற்றின் வாயிலாகக் காணலாம்.

நல்குரவே தமக்குற்ற நல்லுறவன்றி வேறுறவினர் இல்லையென்னும்படிக்கு வாழ்ந்தவர். ஆம், கைப்பொருளொன்றுண்

டாயின் ஒருவனை எல்லாரும் நாடுவர்; புகழ்ந்தேத்துவர்; இல்லாத உறவாயினும் இழுத்துங்கொள்வர். எனவே, மெய்ப் பொருளொன்றே யன்றிக் கைப்பொருளாகப் பெருஞ்சித்திரனருக்கு இருந்தவையெல்லாம் வறுமையும், அதனால் வருந்தி வாழ்விழந்துகொண்டிருக்கும் மனைவி மக்களுமே யாவர். அவரது மனையற வாழ்க்கையோ புனையுரைக்கும் எட்டாதவை. கிடைத்தனவற்றைப் பலருக்கும் பங்கிட்டுண்ணுதலால் உள்ள பொருளழிந்து வேறெதுவும் இன்றி வாட்டமுறும் புல்லிய உளைமயிர்போலும் குடுமியைப் பெற்றுள்ள அப் புலவர்பெருந்தகையின் இல்லாள் தன் புதல்வன் பலபடியும் பாலில்லாது, வருடிய தனது தனத்தைச் சுவைத்தும் பால் பெறாதவனாய்க் கூழும், சோறும் வேண்டி விட்டிலுள்ள மண்சட்டிகளைத் திறந்து திறந்து அவற்றுள்ளும் ஏதும் இல்லாமையைக் கண்டு அழவும், அந்த அழுகையை மாற்றத் தாயானவள் புலியை வரவு சொல்லிப் பயமுறுத்தலும் அதனாலும் அழுகை நீங்காமையான் வருந்தியவளாய் அம்மகவைநோக்கி நின் தந்தையை நினைந்து வருந்துவாயெனச் சொல்லுதற்கும் அமையாளாய் வருந்துகின்ற நிலையிலுள்ள அவளது நிலையையும், தம் இல்ல நிலையையும் ஒரு சித்திரமாகப்பாடிய பெருஞ்சித்திரனார் முதிரமென்னும் மலைக்குத் தலைவனாகிய குமண வள்ளலிடம் சென்று பரிசும் பெற்றார். பரிசோ பெருஞ் செல்வக் குவியல்!

பெற்ற பெரும் பரிசோடு தம்மனை சேர்ந்தார். வள்ளலின் தன்மைக்கு உள்ளம் மகிழ்வுபெற்றார்! கொழுநன்கொணர்ந்த பரிசுப் பொருளைக்கண்ட அவரின் இல்லக்கிழத்தியோ சொல்லொணா உவகை யடைந்தாள். அதனைக் கொண்டு தமக்குற்ற வறுமை நோயைத் தீர்த்துக்கொள்ள முடிவு செய்தாள். ஆனால் புலவர் பெருந்தகையோ கிடைத்த பரிசிலைக் கீழ்க்காணுமாறு பயன்படுத்துமாறு மனையாளுக்குப் பணித்தார்.

“என் அருமை மனைக்குரியவளே! பலாப் பழமுதலாயின சுவைமிக்க பழங்கள் தூங்குதல் புரிகின்ற முதிரமென்னும் மலைக்குத் தலைவனும், திருந்திய வேலினையுடையவனுமாகிய குமணன் என்னும் வள்ளலளித்தவை, இச்செல்வக்குவியல்! இவற்றைக்கொண்டு நின்னிடம் அன்பு கொண்டு வாழும் மகளிர்க்கும், பல குணநலங்களையும், பெருமை வாய்ந்த கற்பினையும் உடைய நின் சுற்றத்து முதிய மகளிர்க்கும், நம்மவரது கொடும்பசியைத் துடைக்க நினக்கு நெடுநாட்படக் குறித்தளிர்ப்பைத் தந்தவர்கட்கும் இன்னும் இத்தகையரென்று எண்ணாமல், என்னையும் எதிர்கொண்டு கேட்டுக் கொடுப்போமென்னாது, நெடிது குடிவாழ்க்கைவாழ்தலை

விரும்புவோ மென்றுங் கருதாது நீயும் யாவருக்கும் வழங்குதல் செய்வாயாக!" என்னுந் தமது எண்ணத்தைத் தெரிவித்தலைமையைப் புறநானூறு தெளிவுறுத்துகிறது.

'நின்னயந் துறைநர்க்கும் நீ நயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்குங்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னா தென்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்
எல்லோர்க்குங் கொடுமதி மனைகிழ வோயே!
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமண னல்கிய வளனே.' —புறம்: ௧௬௩.

வள்ளலாயினும் வறிஞராயினும் நம்மவர் உள்ளப் பண்புதான் என்னே! இஃதன்றோ **போற்றி வழங்குநெறி**! அவர்கள் நிலைக்கும் இன்றுள்ள நம்மவர் செயலுக்கும் உள்ள வேறுபாடு எத்தகைத்து என்பதை நாம் இனியாவது ஓர்தல்வேண்டும். ஓர்ந்தவாறே உறைதலும் வேண்டும் தமிழ் மகனே!

உண்மையான அறம், பொருள், இன்பம் என்பன யாவை? ஈத்துவக்கும் இன்பமன்றோ உண்மையான அறமாகக் கருதப்படும்? தீவினை நீக்கிப்பெறுகின்ற பொருள் தானே உண்மைப் பொருளாக ஆன்றோர்களால் கருதப்படுகிறது? என்றும் அன்பெனும் பிணைப்பால் ஒரே கருத்துடையவராகப்பெற்றுக் கணவனும் மனைவியும் ஒன்றுபட்டு வாழ்வதன்றோ இன்பம்! இம்மூன்று நிலையினுக்கும் உடையவராகி அந்நெறியில் தம் வாழ்நாளைச் செலுத்துவதன்றோ நிலையான வீடுபேறாகும்!

'ஈதலறம்; தீவினைவிட் டீட்டல் பொருள்; எஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொருமித்து—ஆதரவு
பட்டதே யின்பம்; பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.'

ஆகவே, நம் முதுகுரவர்களின் வாழ்க்கை நெறிக்கு - **போற்றி வழங்கு நெறிக்கு** - அடிகோலியதாகக் கருதப்பட்டு வந்ததே இந்த அறமும், பொருளும், இன்பமும், வீடுமாகும். கருதியவாறே நடந்து காட்டினவர்களும் நம் தமிழ்ப்பெரு மக்களே. இந்த நெறிபற்றி வாழ்ந்தவர் - வாழ்பவர்களையே உலகம் என்றும் போற்றி வாழ்வதாகும். வாழ்ந்தவாறே வழங்குவதுமாகும். வழங்கு நிலையில் நெறிப்பட்ட ஒருவனது வாழ்வே பல்லோராலும் போற்றி வழங்குநெறியாகக் கொள்ளப்படும்.

'ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கு நெறி.' —திருக்குறள், ௭௨௫.

தாய்க்கடன்

[தென்னாப்பிரிக்கா-டர்பன்-திரு. ச. மு. பிள்ளை]

தாய் தன் மக்களிடத்து அன்பும், சாந்தமும், பொறுமையும் கலந்து மிளிரச் சீவித்தல் எவரும் ஒப்புக்கொள்ளக் கூடியதோர் உண்மையாகும். தாயினும் அதிகமாகப் பிள்ளைகளை நேசிக்கத்தக்க உரிமையுடையவர் உலகில் இலர். அவ்வாறு தான் முழு மனதுடன் நேசிக்கும் பிள்ளையை உலகில் அறிவாலுயர்ந்தோர் மத்தியில் வைக்க எண்ணுதல் நலமென்பதையும் உணர்ந்து நடக்கும் தாய்மார் மிகச்சிலர். தாயானவள் இத்தகைய தன் கடன் உணர்ந்து அதற்கான எத்தனங்களைத் தினமும் தன் மக்கட்கு ஊட்டிவர உன்னுதல் வேண்டும். அங்ஙனம் செய்யாதிருப்பின், பின்னர்த் தம் மக்களால் கலங்கிக் கலங்கித் திகைக்க ஏதுவாகும்.

பிள்ளையானது தந்தையிடமிருந்து தன் வாழ்க்கைக்கு வேண்டியதைத் தெரியப் போதிய சாதனங்கள் இருந்தபோதிலும், அதுவோ தன் தாய் தந்தைக்குக் காட்டும் அன்பின் பெருக்கால் மயங்கித் தாயைத் தன் சிறு மனதினாலே முழுவதாக நம்பி நேசிக்கத் தொடங்குவதால், அவளிடமிருந்தே தன் வருங்கால வாழ்வுக்கு வேண்டிய சகல ஏதுக்களையும் தெரிந்துகொள்ளுகின்றது. ஆகவே, பிள்ளை தன் வளரும் பருவத்தில் தன் மாதாவைப் பார்த்து அவளிடமிருந்து தனக்காகும் நன்மையோ, தீமையோ தெரிந்துகொள்வதால் அதுவே அப்பிள்ளையின் அடிப்படையாகி மனதில் உறுதிப்படுகின்றது. இக்காரணம் பற்றியே "தாயைப்போல் பிள்ளை நூலைப்போற் சீலை" எனச் சொல்வதுண்டு. பெரும்பாலும் பிள்ளைகள் தாய்மாரின் சாயல் என்றே சொல்லலாம்.

"தாயோடறுசுவைபோம் தந்தையோடு கல்விபோம்" என்னும் பாடலைப் பெரும்பாலானோர் பின்பற்றினவர்களாகத் தம் மக்களின் தேகத்தை வளர்க்கப் பிரயாசை யெடுத்து, தம்மையும் பொருட்படுத்தாது அல்லும் பகலும் பாடுபட்டு அவர்களை உண்பித்து பின்னர்ப் பல்வகையான சுவையுள்ள உணவுகளால் மாத்திரம் அவர்களை இன்புறச் செய்கின்றனர். தேக வளர்ச்சிக்கான ஏதுக்களையே எந்நேரமும் எவ்விடத்தும் பேசி, அதுவே தம்மாற் செய்யக் கூடியதுபோல் நடந்து தந்தையின் மேலேயே மன வளர்ச்சிக்கான சகல பொறுப்பும் தங்கியுள்ளது என்றெண்ணிச் சீவிக்கின்றனர். சிற்சிலர் கல்விக்கடுத்த காரியங்களைத் தேடி நாடுவதைக் கைநெகிழ்வதோடு, தந்தை

தன்னாலியன்றதைச் செய்யுங்கால் தாய் அவர் எடுக்கும் சிரத்தையோடு தானும் சேர்ந்து கலந்து உற்சாகப்படுத்தாது, தமது விருப்பு வெறுப்பையும் காட்டாதுவிடுகின்றனர். அன்றியும் தந்தை தன் பிள்ளைகளுக்கு நன்மை செய்பவர்போலக் காட்டி அவர்க்கு இடையூறாக இருப்பவருமுண்டு. அம்மம்ம! இது எத்துணைத் துன்பதைத் தம் பிள்ளைகட்குக் கொணரும் என்பதைத் தாய்மார் அறியார் போலும்! பிள்ளையை ஈன்றபொழுதில் தாய்க்கு உண்டாகும் மகிழ்ச்சியிலும், அப்பிள்ளை அறிவாலுயர்ந்தோர் மத்தியில் கல்வி மிக்கதாக விளங்குங்காலை அவளுக்குண்டாகும் இன்பம் பன்மடங்கு அதிகமல்லவா?

தாய், பிள்ளை தன் மடியிலிருந்து வளருங்காலும், அது பாலிய பருவத்தில் தன் விளையாட்டுடன் காலத்தைச் செலவிடுங்காலும், தன்னைத் தனது மொழியை, செய்கையை, கூட்டுறவை, நடத்தையைக் கவனித்து அவற்றிலிருந்து தனக்கு வேண்டியவற்றை நிமிடந்தோறும் தேடிப் பொறுக்கி வருங்காலத்திற்கு தன்னைப் பலப்படுத்தும் உபகரணங்களாக்கிக் கொள்கிறதென்பதைச் சிந்தியாது, பின்னால் சரிப்பட்டுவிடும் என்று கவலையற்றிருப்பது வருந்தத்தக்கது. தாய் தன் பிள்ளைக்கு உடனிருக்கும் உபாத்தியாயினி என்பதை மறவாதிருத்தல் வேண்டும். உபாத்திமார் பாடசாலையில் பெரும்பாலும் போதனையாற் படிப்பிக்கப் பார்ப்பதோடு அப்படியே செய்தும் வருகிறார்கள். ஆயின் மாதாவோ எந்நேரமும் தன் மக்களுடனிருப்பதால் போதனையாலும் சாதனையாலும் அவர்களை வளர்க்கவேண்டிய குருவாகின்றாள். ஆகவே பிள்ளைகள் ஒழுக்கம் யாரிடம் தங்கியுள்ளது என்பதைத் தாய்மார் எண்ணுதல்வேண்டும்.

பிள்ளை தாயின் மடியிலிருந்த காலம்முதல் பிராயமடைந்து குடும்பத்துட் புகுங்காலம் மட்டும், அல்லும் பகலும் தன் தாயையே தியானமாக்கி மனோபாவனை செய்து அவளை பிரதிவிம்பிக்கப் பிரயாசைப்படுகிறது. மாதாவின் மொழியே பிள்ளையின் மொழியாகும். இனிய செந்தமிழ் அன்னையின் மொழியாகுமானால், அதுவே தன் பிள்ளைக்குமுரிய மொழியாகும். தாய் இன்சொல் கனியும் குணமுடையவளாயிருந்தால் பிள்ளையும் இன்சொல்லே மொழியும். அறத்தின் செயல்கள் மாதாவினிடம் இல்லையாயின் மக்களிடத்து அவை எங்ஙனமிருக்கும்? தாயினது சிநேகர் எத்திறத்தினரோ அவ்வாறே அவர்தம் மக்களுக்கும் நண்பரிருப்பர். அவர் அறிவாலுயர்ந்தோரைச் சார்ந்திருப்பின் மக்களும் அவரைச்சார முயல்வர், இவ்வாறே மொழியையும் செய்கையையும் சிநேகரையும் சிறுவயதிலேயே செவ்வனே ஆராய்ந்துணர்ந்து, அவ்வுணர்ச்சிகொண்டு தமக்கென

அமைக்கும் மக்களது ஒழுகத்தை வருணிக்க யாரால் முடியும்? உயிரினும் மேலாக உயர்ந்தோராற் கருதப்படும் ஒழுக்கமுடைய ராகும் பிள்ளைகளது பெருமையைக் கண்டு தாய், உறவினர், பெரியோர் முதலியவர்கள் போற்றுவதை யாரே ஆட்சேபிக்க வல்லார்?

பின்னும் பிள்ளைகள் தம் சாதிக்கும் தேசத்துக்கும் உலகத் துக்கும் பிரயோசனமுடையவராக வரக்கூடிய நற்போதனைகளை அவர்கள் சிறுபிராயந்தொட்டு ஊட்டி வருதல் தாயினது கடனு கும். பொருட்செல்வத்திலும், கல்விச் செல்வம் மேம்பட்டதென் னையும் அதுவே கொடுக்கக் கொடுக்கக் குறையாத தனமாகிப் பெருகும் விசேடமுடையதென்பதையும் "மாசறக் கற்றோர்க்கு உலகெலாம் சிறப்பு" என்பதையும் மக்களின் சிறு பருவத்தில் அவர்கள் இதயத்தில் கல்லின் எழுத்துப்போல் வளர்த்து விடுதல் இன்றியமையாத நற்செயலாகும்.

மேலும் தாய்மார் தம் மக்களுக்கு "இட்டார் பெரியோர் இடாதாரிழிகுலத்தோர்" என்னும் உறுதி மொழியையும் தம் தினசரி போதனையால் மாத்திரமன்றிச் சாதனையாலும் காட்ட வேண்டியவராகின்றனர். தாம் பிறவியிலுயர்ந்த குலத்திலுதித் தமையால் பிறரைத் தாழ்குலத்தினரென்றும் சொல்லல் பெரி யோர் கொள்கையன்று. ஒருவன் தன்னைத்தானே தன்னெண் ணத்தால், பேச்சினல், செய்கையினல் நடத்தையினல் உயர்குலத் தினனுகலாம். பணத்தை மாத்திரம் பிச்சை கொடுப்பது போதிய தன்று. எதுவிடயத்திலும் தாழ்ச்சியடைபவர்மாட்டுப்போய் அவர்க்குத் தாழ்ச்சி நீங்க இனிய மொழியோ, அறிவுனலோச னையோ உடல் உதவியோ எதுவானுலும் உதவிடவே ஒருவனை மேனிலைக்குக் கொணரும். உலகம் பெருமை கொள்ளவும் நேரிடும். ஆனதுபற்றித் தாய்மார் தம் மக்களுடன் சிறுபருவத் தில் பேசும் பேச்சுக்கள், சிறு கதைகள் யாவும் இப்பேர்ப்பட்ட எண்ணத்தை அவர் மனத்தில் எழுப்புதற்கேற்றனவாகவே பேசுதல் வேண்டும்.

முடிவாக நாள்தோறும் தம் கடமையை யறிந்து தம்மக்களை மேம்படுத்தும் வழிவகைகளைக் கணந்தோறும் எண்ணுதலைக் காட்டினும் சிறந்தது தாய்மாருக்கு எதுவுமில்லை. ஆகையால் தம் மக்கள் மேன்மைக் குணமும், பரந்த மனமும், அறச்செயலு முடையவராகி, அவைதனில் கல்வியாளராக விளங்கி, அவர்களை உலகம் போற்றும் உத்தமர்களாக்க முயலுவார்களாக!

*தமிழ்நாடே உலகின் கலைக்கோயில்

[பேராசிரியர் திரு. கா. பொ. இரத்தினம் எம். ஏ., பி. ஓ எல்.]

ஈழநாட்டின் சரித்திரத்திலும் நாடகக் கலையின் வரலாற்றிலும் இன்றையநாள் தனிப் பெருமையுடையது. இக்கொழும்பு மாநகரிலேயுள்ள பத்துச் சங்கங்கள் ஒன்றுபட்டு நாடகக் கலைஞர்களை இன்று பாராட்டுகின்றன. முற்காலத்திலே முடியுடை மூவேந்தருங் குறுநில மன்னர்களும் பெருநிதிச் செல்வர்களும் கலைஞர்களைப் பாராட்டினார்கள். பெரும் போரினாற் பெறமுடியாதவற்றைக் கலையினாற் பெறத்தக்க நிலைமை தமிழ்நாட்டிலிருந்தது. புலவர் பெருமானாகிய கபிலர் இந்த உண்மையை அழகாகக் கூறியுள்ளார். பாரி எனும் வள்ளலைத் தோற்கடிப்பதற்கு மூவேந்தர்களுஞ் சேர்ந்து போரிட்டனர். பன்னாள் முயன்றும் அவர்கள முயறசி பயனளிக்கவில்லை. வாளினாலும் தாளினாலும் பெறமுடியாதவற்றைப் பெறுதற்குரிய வழியினைக் கபிலர் மூவேந்தருக்குங் கூறினார்.

"தாளிற் கொள்ளலிர் வாளிற் றாரலன்
யானறிகு வனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பிற் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தல்நும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்றும் ஒருங்கீ யும்மே."

இது தான் அவர் கூற்று. ஆடல்பாடல்களுக்கு-இசை நாடகக் கலைகளுக்கு - அக்காலத்திருந்த பெருமையினை எடுத்துக் காட்டுதற்கு இதனை விடச் சிறந்த செய்தி வேறுண்டோ?

பல்லாயிரம் ஆண்டுகளாக நாகரிக வாழ்க்கையினை நடத்திய தமிழினம், அழகியற்கலைகளின் சிறப்பை நன்குணர்ந்து அவற்றைக் கண்ணே போற் போற்றி வந்துளது. இக் கலைகளுள்ளும் இலக்கியம் இசை நாடகம் எனும் மூன்றினையும் சிறப்பாக வளர்த்தனர். அழகியற்கலைகளுள் இம் மூன்றுமே மொழியுடன் தொடர்புபட்டவை. மனிதனை விலங்கினின்றும் மொழி எவ்வாறு பிரித்து உயர்த்துகிறதோ அவ்வாறே இக்கலைகள் இவற்றினைச் சுவைத்துப் பண்பட்டோரை ஏனையோரினின்றும் பிரித்து

---

*நாடக மாமணிகள் டி.கே. சகோதரர்களுக்குக் கொழும்பு மாநகரிலுள்ள பத்துச் சங்கங்கள் எடுத்த பாராட்டுவிழாவில் நிகழ்த்திய உரை.

உயர்த்துகின்றன. இவற்றின் ஈடுபாடின்றி மக்கள் பண்பாடு உடையவர்களாக நல்வாழ்வு வாழுதல் முடியாது. ஆதலால் இவையும் மொழியினைப் போல எல்லா மக்களுக்கும் இன்றியமை யாதன. இந்தப் பேருண்மையினை நன்கு அறிந்தே நம் முன் னோர் இவற்றை நம் மொழியுடன் இணைத்து 'முத்தமிழ்' என வழங்கினர். இம்மூன்றினையும் ஒன்றாக வளர்த்தனர்; முத்த மிழ்க் கலைஞர்களுக்குச் சமுதாயத்தில் முதலிடமளித்தனர்.

இந்த வுண்மையினை மீண்டும் தமிழ் மக்கள் உணர்ந்து இக் கலைகளை வளர்த்துப் பயன்பெறவேண்டுமெனும் நோக்கத் தாலேயே சென்ற ஏழு ஆண்டுகளாக இக் கொழும்பு மாநகரிலே முத்தமிழ்விழாக்களை நடத்திவந்தோம். சென்ற ஆண்டிலே ஏழெட்டிடங்களிலே முத்தமிழ் விழாக்கள் நடந்துள்ளன. இது தமிழ்மக்கள் தாம் வாழும் நாடுகளெங்கும் முத்தமிழ்விழாக் களை நடத்தி முத்தமிழ்க்கலைகளையும் வளர்க்கும் பெரும்பணி யில் ஈடுபடுங்காலம் அண்மையில் வந்துவிட்டதென்பதற்கு அறிகுறியாகும்.

ஆவடிக் காங்கிரசு மாநாட்டிற்கு வந்த இந்திய முதலமைச் சர் நேரு அவர்கள் 'தமிழ்மொழி இந்தியநாட்டுக்குப் பெருமை அளிக் கிறது' என்று கூறினார். சில நாட்களுக்கு முன் சென்னைக்குவந்த சீனக் கலைக்குழுவின் தலைவர், 'இந்தியக் கலையின் தலைவாசல் சென்னையே' என்று உரைத்தார். இந்தியாவுக்கு மாத்திரமேயன்றி முழு உலகுக்குமே கலைக்கோயிலாகத் திகழும் தகுதி வாய்ந்தது தமிழ் நாடேயாகும். இந்நிலைமையைத் தமிழ்நாடு விரைவில் அடைந்து விடும் என்பதற்கும் பல சான்றுகள் இப்பொழுது காணப்படு கின்றன. தமிழன் என்ற முறையில் தமிழ்நாட்டைப் புகழ் கிறேன் என்று கருதல் வேண்டாம். கலையின் வளர்ச்சிக்கும் உரிய காரணங்களை அறிந்தவர்கள் இஃது உண்மை என்பதை உணர்வார்கள்.

இலக்கியம், இசை, நாடகம் முதலிய கலைகளை எவ்வாறு முயன்றாலும் சில ஆண்டுகளில் சிறப்புடையனவாக உருவாக்கி விடல் முடியாது. இவற்றின் வளர்ச்சி மொழியின் வளர்ச்சி யையும், மக்களுடைய நாகரிக முதிர்ச்சி, அழகியலுணர்வு, ஆதரவு முதலியவற்றையும், கலைஞர்களின் தொண்டு, ஆராய்ச்சி முதலியவற்றையும் பொறுத்துளது. சுருங்கக் கூறின், நாகரி கம் முதிர்ந்த ஓரினத்தின் பல்லாயிர ஆண்டின் படிப்படியான முயற்சியே இக்கலைகளின் சிறப்புக்குக் காரணமெனலாம்.

தமிழ்நாட்டை உலகின் கலைக்கோயிலாகத் திகழச் செய் தற்குப் பல கலைச்சிற்பிகள் இப்பொழுது முயல்கிறார்கள். இவர்

களுள்ளே சிறந்தவர்கள் யாம் இன்று பாராட்டும் டி. கே. எஸ். சகோதரர்கள் என்பதைப் பல்லாயிரக்கணக்கில் இங்குக் கூடியிருக்கும் அவையினரே உறுதிப்படுத்துகின்றார்கள். இக்கொழும்பு நகரிலுள்ள மக்களில் ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்டோர் இவர்கள் நடத்திய நாடகங்களைக் கண்டு களித்திருக்கின்றார்கள். பழம் பெருமை வாய்ந்த நமது நாடகக் கலையினைத் திரைப்படம் ஒதுக்கி விடல் முடியாது என்பதை இச்செய்தி உறுதிப்படுத்தி விட்டது.

இலக்கியம், இசை என்பவற்றிலும் பார்க்க நாடகம் சில துறைகளிலே சிறந்து விளங்குகிறது. அவை காதுக்குங் கருத்துக்கும இன்பமளிக்குமேயன்றி நாடகம் போற் கண்ணுக்கும் விருந்தளிக்கமாட்டா. படித்தவர்களும் படியாதவர்களும் எவ்வித வேறுபாடுமின்றிச் சுவைக்கத் தக்க தனிப்பெருமையும் உடையது நாடகக்கலையே. பல காலங்களிற் பல்வேறிடங்களில் நடந்த நிகழ்ச்சிகளை ஒரு காலத்தில் ஓரிடத்தில் நம் கண்முன்னே காட்டும் ஆற்றல் உடையது அது. மேலும், நாம் காணும் நிகழ்ச்சிகளிலே பங்குபற்றாமல் அந்நிகழ்ச்சிகளாற் பெறத்தக்க அனுபவத்தை யாம் இலகுவிற் பெறவும் அது வாய்ப்பளிக்கிறது. நமக்குப் பல உணர்ச்சிகளையூட்டி அவற்றை நிறைவுசெய்து உள்ளத்துக்கு நிறைவினையும் அளிக்கிறது. வாழ்விலேற்படுந் துன்பங்களைக் கண்டு அவைபடும் மக்களுக்கு அத்துன்பங்களைக் கற்பனையாற்காட்டி இன்பம்நல்கும் மாயவித்தையே கலையின் தனிச்சிறப்பு என்பர். இச்சிறப்பிலும் நாடகக்கலைக்குத் தனி உரிமையுண்டு. மக்களிடையே உள்ள அறியாமை, போட்டி, பொறாமை, போராட்டம் முதலியவற்றை நீக்கி இன்பமாக வாழும் வழியைக் காட்டுதற்கும் நாடகக் கலையைப்போற் சிறந்த தொன்று இவ்வுலகில் இல்லை எனலாம்.

நம் நாடகமாமணிகள் டி. கே. எஸ். சகோதரர்கள் நடித்த 'எது வாழ்வு' எனும் நாடகம், வாழ்விலேயேற்படும் சிக்கல்களைக் காட்டி அவற்றை விடுவிக்கும் முறையைப் புலப்படுத்தும் அருமைதான் என்னே! 'இசைபட வாழ்தல்தான் வாழ்வு எனும் தமிழ்மறையின் முடிபினையன்றோ அது நிலைநாட்டுகிறது.' இவர்கள் நடித்த பயன்மிக்க நாடகங்களைப் பார்த்தபின்னர்த்தான் "பயன் நாடகம் கண்கனியக் கவர்ந்துண்டு," எனும் சிந்தாமணி ஆசிரியர்தங் கூற்று நன்கு புலனாகிறது. இவர்களுடைய நாடகங்களைப் பார்த்தற்குத் திரண்டுவந்த மக்களின் தொகையினைப் பார்த்த பொழுது ஈராயிரமாண்டுகளுக்குமுன் தமிழ் நாட்டிலே நாடகம் பார்த்த மக்களின் நினைவு, எனக்கு வந்தது. அக் காலம்போல இக்காலத்திலும் மக்கள் பெருங்

கூட்டமாக நாடகங்களுக்கு வந்தார்கள், அக்கால மக்களின் கூட்டத்தைப் பற்றி, "கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ் செல்வம், போக்கும் அது விளிந்தற்று," என்று வள்ளுவர் பெருமான் கூறியுள்ளார்.

நம் ஈழநாட்டில் மாத்திரமன்றி இந்தியாவின் பல பகுதிகளி லும் வாழும் தமிழ்மக்களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்ட நாடக மாமணிகளாக டி. கே. எஸ். சகோதரர்கள் விளங்குகிறார் கள். அவர்களுடைய நாடகங்களால் நம் ஈழநாட்டு மக்களி டையே தமிழ்ப்பற்றும் இன உணர்ச்சியும் மிக்கோங்குகின்றன. 'வீடுதோறும் கலைகளின் விளக்கம்' ஏற்பட வேண்டுமென்று பாரதி யார் விரும்பினார். இப்பொழுது இம்மாநகரிலுள்ள தமிழர்களு டைய வீடுகளில் டி கே எஸ் சகோதரர்களின் கலைத்திறனைப் பற்றிய பேச்சு நிகழ்கிறது. முன்போற் கலைஞர்களைப் போற்ற நாம் அறிந்து விட்டோம். இனிக் கலைகளைப்போற்றி வளர்த்து வீடுகள் தோறும் கலைவிளக்கங் காண்போம் என்பதற்கு ஐய மின்று.

தமிழ்க் கலைகளின் பெருமை உலக அரங்கிலே நிலைநாட்டுங் காலமும் இனி வந்து விடும். நம் நடிக மாமணிகள் இதற்காக வும் இனி முயலுதல் வேண்டும். சென்னை மாகாணம் தமிழ்நாடெனப் பெயர் கொண்டு தமிழ் அரசியல் மொழியாக அரியணை ஏறியவுடன் இஃது இலகுவில் நடைபெறும்.

டி. கே. எஸ். சகோதரர்களுடன் நன்கு பழகும் வாய்ப்பு எனக்குச் சில ஆண்டுகளுக்கு முன் தில்லிமாநகரில் நடந்த தமிழ்விழாவின் போது ஏற்பட்டது. டி. கே. சண்முகம் அவர் களைத் தமிழ்ப்பண்பாட்டின் உருவம் என்றே கூறலாம். நாடகக் கலைஞராக மாத்திரமன்றி அவர் முத்தமிழ்க்கலைஞராகவுந் திகழ்கிறார். அவருடைய பெருமைக்குக் காரணம் அவருடைய தமிழார்வமும், முத்தமிழ்ப்புலமையும், பண்பாடுமேயாகும். அவர்களைப் போல நடிக்கும் ஆற்றல் உள்ளவர்கள் தமிழ் நாட் டிலே இருக்கலாம். ஆனால் அவர்களைப் போல் நாடக நூற் புலமையும், நூல் ஆராய்ச்சியும் உடையவர்கள் தமிழ் நாட்டில் இல்லையெனலாம். எந்தக் கதையை நடித்தாலும் தமிழ் மரபுக் கும், தமிழர் பண்பாட்டுக்கும், தமிழ்மொழியின் 'உயர்வுக்கும் ஏற்றம் அளிக்கும் மூல முறையில் அக்கதையினை அமைத்துக் கொள்ளும் அவர்தம் புலமையினை அறிஞர்கள் பாராட்டு கின்றனர்.

இவராற் சிறப்படைந்த கதாபாத்திரங்களுள் ஔவையாரையே யாவ ரும் போற்றுகின்றனர். அழகிய இளமங்கையாக நடித்தற்கு

வேண்டிய அழகும் அமைப்பும் இவருக்கு உண்டெனினும், தமிழ்க் கிழவியாக நடித்தே இவர் புகழீட்டியுள்ளார். உருவத்தை மாத்திரமன்றிக் குரல், செயல் முதலியவற்றையும் மாற்றி இவர் ஔவையாராக நடிக்கும் பொழுது இவருடைய நண்பர்கள் கூட இவரை அறிந்து கொள்ளுதல் முடியாது. இவ்வாறு அற்புதமாக நடிப்பவர்களை இவ்வுலகிற் காணுதல் முடியாதெனலாம். இவருடைய இந்த நடிப்புத்திறனை மந்திரமோ, தந்திரமோ, மாயமோ என்று புலவர்களும் பொதுமக்களும் போற்றுகின்றனர். இவருடைய இந்த நடிப்பு மாத்திரமே உலக அரங்கிலே தமிழ்நாட்டுக்குப் புகழ் ஈட்டித் தரத்தக்கது.

இவர்தம் நடிப்புத்திறனை உணர்ந்த அறிஞர்கள் இந்த நாடக மாமணியை **ஔவை சண்முகம்** என்று பாராட்டுகிறார்கள். தமிழ்ப்புலமை உலகிலே ஔவையாருக்கு எப்படி ஒரு தனிப் பெருமையுண்டோ அப்படியே நாடகக் கலையுலகில் ஔவை சண்முகத்துக்கு ஒரு தனிப் பெருமையுண்டு. **ஔவையார் புகழ்போல் அவர்தம் புகழும் என்றும் நிலைத்து நிற்கும்.**

இவருடை அருமைத் தம்பியார் டி. கே. பகவதி அவர்களைப் பற்றிப் பல கூற வேண்டியதில்லை. ‘அண்ணன் எப்படித்தம்பியும் அப்படி,’ என்று கூறுதலே பொருத்தமாவது. இவர்களுடைய நாடகக் குழுவிலுள்ள ஏனைய கலைஞர்களும் இவர்களைப் போலவே கலையார்வமும், நடிப்புத் திறனும், பெருநோக்கமும் உடையவர்கள். இவர்கள் யாவரும் ஒற்றுமையாக நாடகக் கலைக்குச் செய்து வருந்தொண்டினைப் போற்றுகிறோம், புகழ்கிறோம். **பொலிக! இவர்கள் தொண்டு; வாழ்க! நாடகக் கலை.**

இயற்கைக் கூத்தும் இசையும்

‘இருள்வளைப் புண்ட மருள்படு பூம்பொழில்
குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட
மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய
வெயில்நுழை பறியாக் குயில்நுழை பொதும்பர்
மயிலா டரங்கின் மந்தி காண்பனகாண்
மாசறத் தெளிந்த மணிநீர் இலஞ்சிப்
பாசடைப் பரப்பின் பன்மலர் இடைநின்று
ஒருதனி ஓங்கிய விரைமலர்த் தாமரை
அரச அன்னம் ஆங்கினி திருப்பக்
கரைநின் றாலும் ஒருமயில் தனக்குக்
கம்புட் சேவல் கனைகுரல் முழவாக்
கொம்பர் இருங்குயில் விளிப்பது காணாய்.’

—மணிமேகலை-௩: ௨-௧௩.

செய்திகளும் குறிப்புக்களும்

(க) பண்ணொலிகேட்கும் பழங்கால மண்டபம்

சென்னைப் பல்கலைக் கழக இசைப் பேராசிரியர், திரு. பி. சாம்பமூர்த்தியவர்கள் 27-5-1955 இல் திருக்குற்றாலஞ் சென்றனர். திருக்கோவிற் செயலாளர், அறங்காப்பாளர் முதலியோரால் நன்கு வரவேற்கப்பட்டனர். வழிபாடியற்றினர். உலகன்னையாராகிய பேராற்றலின் திருமுன் மண்டபத்தில் ஒரு கல்லைக்கொண்டு தட்டினர். அதிலிருந்து ஓர் அரிய இன்னொலி தோன்றிற்று. அவ்வொலி ஆனந்தப் பைரவியாகக் காணப்பட்டதாம். என்னே பழந்தமிழ்க் கற்றச்சரின் நுண்மதி. ஆயிரக்கணக்கான ஆண்டுகள் சென்றும் எவ்வகைக் காவலுமின்றி பல்லாயிரக்கணக்கான வழிபாட்டன்பினர் தீண்டியும் இன்னோசை மழுங்காது இன்றுங் கேட்கின்றதென்றால், இது வியப்பினும் வியப்பன்றோ? இத்தகைய அருங்கலை பல நிறைந்த திருக்கோவில்களை நாம் இக்காலத்தும் உண்டாக்கி நம் பழந்தமிழ்ப் பண்பாட்டினைப் பேணி நிலைநிறுத்துவதன்றோ நம் கடமையும் உரிமையும் அறிவுடைமையும் ஆகும். அதற்கு மாறாக இருக்கும் கோவில்களைப் பழுதாக்கவும் பழுதுபட்ட கோவில்களைத் தரைமட்டமாக்கவும் மடிகட்டி மார்தட்டி முன்வரும் மதியினர் முயற்சியே பெரிதாகின்றது. அந்நண்பர்கள் நன்முயற்சியில் ஈடுபட்டு நாட்டையும் மொழியையும் நன்னெறியினையும் பண்டுபோல் ஓம்புவாராக.

(உ) தேவாரப்பணி

30-5-1955 இல் சென்னையை அடுத்துள்ள வடதிருமுல்லைவாயிலின்கண் காசித்திருமடத்து முதல்வரின் தேவாரத் திருப்பணிச் சிறப்புக் கூட்டம் நடந்தது. திருவாளர் சங்கரவடிவேற் பிள்ளையவர்கள் (இந்து நெறி அறங்காவற்றுறை முதல்வர்.) தலைமை பூண்டார்கள். பல மெய்யடியார்களும் புலவர்களும் ஓதுவாமூர்த்திகளும் சொற்பொழிவும் ஓதுதலும் புரிந்தனர். வன்றொண்டப் பெருந்தகையார் பாடியருளிய அத் திருவூர்த் திருப்பதிகம் திருப்பனந்தாள் திருமட முதல்வரால் சீர்பெறப் பளிங்குக்கல்லில் பொன்னெழுத்தால் எழுதுவித்து நிலைநாட்டப்பெற்றது. அத் திருப்பணியைத் தலைவர் அவர்கள் தம் அருமைத் திருக்கையால் திறந்துவைத்தார்கள். அவர்கள் கூறிய அருந்தமிழின் சுருக்கம்:

திருப்பனந்தாள் திருமடமுதல்வர் இதுபோன்று இருபத்தைந்து தேவாரத் திருப்பணிகள் பல்வேறிடங்களில் அமைத்துள்ளனர். தேவாரப் பதிகங்களை எல்லாரும் எளிதின் ஓதிப் பெரும்பயன் எய்த இதுவே சிறந்த வழியாகும் இத் திருமடத்துக்கு ஆண்டு வருவாய் நாற்பத்தேழாயிரம். இம் முதல்வர் இதுகாறும் செய்துபோந்துள்ள அறமுதலீடு முப்பத்து மூன்று நூறாயிரம். ஆண்டு வருவாய் பதினான்கு நூறாயிரமுள்ள பெரிய திருமடங்களிருந்தும் இத்தகைய பேரறங்கள் புரியவில்லை. திருக்கோவிற் குருக்கண்மாருக்குச் சிவமணி வாங்கி வழங்க ஓர் எற்பாடு செய்யவேண்டுமென்று முதல்வர்பாற் குறிப்பித்தேன். அவர்களும் இணங்கி ஐம்பதினாயிரம் வெண்பொன் முதலீடு நிறுவி நல்ல சிவமணிகளை வரவழைத்து வழங்கிவருகின்றனர். அவ்வகையில் ஒன்று இப்பொழுது இத்திருக்கோயில் குருக்களுக்கு வழங்குகின்றேன். அவர்கள் எப்பொழுதும் அணிந்திருத்தல்வேண்டும், மேலும் திருக்கோவில் குருக்கள்மார் அனைவர்களும் தேவாரம் பயின்று ஓதுதல் வேண்டும். தேவாரம் ஓதாத குருக்கண்மார்க்குத் திருக்கோயிலில் வேலையில்லை என்பதே.

மதிப்புரை

(க) தண்டியலங்காரம் வினு - விடை

[இதன் ஆசிரியர் வித்துவான் வ. தங்கையா நாடார் அவர்கள், தலைமைத் தமிழாசிரியர், புனிதயோவான் உயர்நிலைப்பள்ளி, பாளையங் கோட்டை. பக்கங்கள்—கஙஉ, விலை ரூபா. 3.]

இதன்கண் சிறந்த முன்னுரை, ஆராய்ச்சியுரை, பதிப்புரைகள், பிற்சேர்க்கை கசு பக்கங்கள் காணப்படுகின்றன. அணியிலக்கணங் களின் தன்மை, வடமொழி தமிழ்மொழிகளிலுள்ள நூல்கள், நூலாசிரியர் பெயர்கள், காலங்கள், உரைசிரியர் பெயர்கள், காலங் கள் முதலியன செவ்வையாகப் புலனுகும். இவைகளை மாணவரும் ஆசிரியன்மார்களும் குறிக்கொண்டு நோக்கல் சிறப்பாகும்.

நூலாசிரியர் தண்டியலங்காரத்தை மாணவர் எளிதிற்கற்றுப் புலமை எய்தவேண்டும் என்னும் நன்னேக்கத்தால் மிகமுயன்று யாத்துள்ளனர். தண்டியலங்காரச் சூத்திரங்களை முதற்கண் செம்மை யாக அமைத்துள்ளனர். பின்னிணைப்பில் 1930-முதல் 1958, வரை யுள்ள சென்னைப் பல்கலைக்கழகம், மதுரைத் தமிழ்ச்சங்கம் இவற்றால் நிகழ்த்தப்பட்ட வினுக்களை முறையுறுத்துள்ளார்கள். அவ்வவ் வினுக் களுக்குரிய விடைப்பகுதிகளை நூலகத்து எளிதிற்காணும்படி எண் முறை யமைத்துள்ளார்கள். கற்பிக்குமுறையில் மாணவர்க்கு எளிதா கவும் இனிதாகவும் செய்யக்கூடியது வினுவிடை ஒன்றேயாம். அம் முறையில் இவ்வினுவிடை யமைந்துள்ளது. இதன் பொருட்டு ஆசிரியர் மிகுந்த உழைப்பெடுத்துள்ளார்கள். தெளிவும் விளக்கமும் எளிமையும் இனிமையும் ஒருங்கமைந்துள்ளன. இவ்வினுவிடையைக் கற்பார் சூத்திரம், உதாரணச் செய்யுள் விளக்கம் எளிதுணர்ந்து தேறுவதுடன் பெரும்புலமையும் பெறுவர். பாடத்திட்டக் குழுவினர் இதனைப் பாடப்புத்தகமாக அமைத்து ஆசிரியரை ஊக்குவார்களாக. மாணவரும் ஆசிரியன்மாரும் இதனை வாங்கியுதவும் வாயிலாக ஆசிரியர் மேற்கொண்டுள்ள பண்டைய இலக்கண நூல்களின் வினு விடை நூல்கள் வெளிவரத்துணை புரிவார்களாக.

(உ) செஞ்சியின் செல்வன்

[ஆசிரியர், சே. அமலன் அவர்கள். இலக்கியப் பூங்கா, 17, கஸ்தூரிபாய் வீதி, பண்ணுருட்டி. (தெ. ஆ.) பக்கங்கள்-கஎசு, இதன் விலை ரூபா. 2-4-0.]

இஃதோர் அருமையான நாடகநூல். உண்மை வரலாற்று நூல்; உணர்ச்சியூட்டும் புதுமலர்ச்சி நூல். வீரம்செறிந்த பேச்சு, பண்டைய நிகழ்ச்சிகளை நேரிற்காண்பது போலிருக்கும் எழிலமைந்த நூல். இயல், இசை, நாடகம் மூன்றும் முறையே உயிர் உளம் உடல்போன்றன. எனவே நாடக வழியாக ஒழுக்கமுறைகளை எளிதிற் கற்பிக்கலாம். இது போன்ற நூல்களைப் பெருமக்கள் ஆதரித்துப் பண்டைப்பெருமையைத் தமிழகத்துக்குத் தருவார்களாக.

(ங) வாழ்க்கையில் உயரும் வழி

[ஆசிரியர், ச. கந்தசாமி முதலியாரவர்கள், தமிழாசிரியர் ஹிந்து தியாலாஜிகல் உயர்நிலைப்பள்ளி சென்னை. பக்கங்கள்-எஅ, விலை ரூபா. 1-0-0.]

ஆசிரியர் பழுத்த பழக்கம் வாய்ந்தவர். பல நூல் பயின்ற பண் பினர். மாணவர் உளமறிந்த மாண்பினர். மாணவர் மேற்கொண்டு

ஒழுகி நாட்டையும் மொழியையும் நன்னெறியினையும் வளம்படுத்து வதற்கு இந்நூல் வழிகாட்டியாகும்; இதன்கண் ஒழுக்கம், கல்வி, கடவுள் நினைவு, ஆன்றோர் பெருமை, ஆண்மை, அன்பு, நலம் முதலிய பலவும் செம்மையாக உரைக்கப்பட்டுள்ளன. நல்லதன் நலனும் அல்லதன் தீமையும் உண்மை வரலாற்று முறையால் விளக்கப்பட்டுள்ளன. எளிய இனியநடை. மாணவர்க்கு ஏற்றமுறையில் அமைந்துள்ளது. மாணவர் ஆசிரியர், பெருமக்கள் எல்லாரும் இதனை வாங்கிப் பயன் பெற்று ஆசிரியரை ஊக்குவிப்பார்களாக.

(௪) கன்னித்தமிழ்

[எழுதி வெளியிடுவோர் மறைமலையடிமை. பக்கங்கள்-௯௬, விலை ரூபா. 1-0-0. கிடைக்குமிடம்: "கன்னித்தமிழ்" களஞ்சேரி, தஞ்சாவூர்.]

இதன்கண் பல சிறந்த அறிஞர் கட்டுரைகளும் கற்பனைக் கதைகளும் காணப்படுகின்றன. எல்லாம் தனித்தமிழ் வண்ணமே. வடமொழியாளர் சூழ்ச்சியால் நேர்ந்த கேடுகள் ஆங்காங்கு நிகழ்த்தப்பட்டுள்ளன. அறமுறைகள், ஒழுக்கங்கள், வாழ்க்கைப் பண்புகள், புலவர்கள் போற்றும் புலவர்கள், ஆற்றும் ஆண்மையர், வினைப்பயன்கள் முதலிய பலவும் விளங்க உரைக்கப்பட்டுள்ளன. தமிழகமும் தமிழும் சிறந்தோங்க இந்நூல் சிறந்த துணையாகும். இதனை எல்லாரும் வாங்கியும் வாங்குவித்தும் அருந்தமிழ் மொழியினைப் பண்டையினும் சிறக்க ஓங்குவிப்பார்களாக. இந்நெறியில் உழைத்து வெற்றிகண்டுள்ள இந்நூலாசிரியர்க்குத் தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

(௫) ஆழ்வார்கள் கண்ட அல்லிக்கேணி

[ஆசிரியர், திருமலை நல்லான் அவர்கள், பக்கங்கள்-௭௧, விலை அணா 12. கிடைக்குமிடம்: 29, பெருமாள் முதலி தெரு, சௌகார் பேட்டை, சென்னை-1.]

இந்நூலின்கண், பேயார், திருமழிசை யாழ்வார், திருமங்கை ஆழ்வார் ஆகிய திருமாலடியார் பாடியருளிய திருப்பதிகங்களுக்குச் செவ்விய உரையும் விளக்கமும் காணப்படுகின்றன. நடை, இனிய எளிய ஆற்றொழுக்குநடை. பல்லவர்கள் சோழர் பாண்டியர்களைப்பற்றியும் வரலாற்றுக்குறிப்புக்கள் காணப்படுகின்றன. கல்வெட்டுக்குறிப்புக்களும் உள. பல வடமொழி மேற்கோள்களும் உள்ளன. புராணக்கதை, பாரத இராமாயணக்கதை ஆங்காங்குத் திகழ்கின்றன. வேண்டிய அளவு இலக்கணக்குறிப்பும் உண்டு. பெரியவாச்சான் பிள்ளைகள், எம்பார் முதலிய பேருரையாளர் ஈடுகள் சிலவும் காணலாம். வைணவசித்தாந்த அருங்குறிப்புகளும் உள. கதையொடுமட்டும் நின்றுவிடாது கதையின் உருவகத்தால் கைக்கொள்ளவேண்டிய கற்பனைக் குறிப்புக்களும் உள. எடுத்துக்காட்டாக மழை தடுத்தல், யானையைக் காத்தல் முதலியவற்றைக் காண்க. இந்நூலைச் சிறப்பாகத் திருமால் நெறியினரும், பொதுவாகச் செந்தமிழன்பரும் வாங்கி ஆசிரியரை ஆதரிப்பார்களாக.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.



அம்பாசமுத்திரம் வழக்கறிஞர்

க. அ. சிவஞானம் பிள்ளை

மறைவு : **27-6-1955**